விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 325 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (09.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 300 கிலோ ஹெரோயினுடன்
# மாலைதீவில் சிக்கிய இலங்கைக் கப்பல்



(மாலே)

சுமார் 300 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் படிகமெத்தம் பேட்டமைன் உள்ளிட்ட ஏராளமான 04ஆம் பக்கம் பார்க்க

# அநுரவின் அரசாங்கத்தினாலும் பாதுகாப்புக்கு அதிக ஒதுக்கீடு
## அரசியல் அவதானிகள் அதிருப்தி

(கொழும்பு)

நாடு பொருளாதாரநிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்காக 12 பில்லியன் ரூபாய்கள் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமைக்கு அரசியல் அவதானிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2ஆவது வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதில் 2025ஆம் ஆண்டுக்கான 04ஆம் பக்கம் பார்க்க

## - பாதாள உலகக் குழுவினர் -
# யாழ்.கடல் வழியாக தப்பிச் செல்கின்றனர்
## புலனாய்வுத் துறை எச்சரிக்கை

*(கொழும்பு)*

தென் பகுதியில் உள்ள பாதாள உலகக் குழுவினர் யாழ்.குடாநாட்டுக் கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதாகப் புலனாய்வுத் துறை எச்சரிக்கை செய்துள்ளது. *(04ஆம் பக்கம் பார்க்க)*

## உயர்தரப் பரீட்சை
# அனர்த்தத் தடைகளை களைய விசேட ஏற்பாடு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைக் காலப் பகுதியில் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்ப்பதற்காக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பரீட்சைத் 23ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் இடியுடன் கூடிய கன மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய மாகாணங்களில் இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் 02ஆம் பக்கம் பார்க்க

# தெற்கில் சூடு நடத்திவிட்டு வடக்குக்கு தப்பி வந்தனரா?
## மானிப்பாயில் மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய மூவர் நேற்று 8ஆம் திகதி மானிப்பாய் பகுதியில் வைத்து கைது செய்யப்பட் 23ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்துக்கு நாட்டமில்லை
## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் குறித்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் ஒரு உறுதியான நிலைப்பாடு இல்லை எனத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று முன்தினம் 23ஆம் பக்கம் பார்க்க

## மனைவியைப் பார்ப்பதற்காக
# யாழிலிருந்து கடல் வழியாக தமிழகம் சென்றவர் கைது

(இராமேஸ்வரம்)

தமிழ்நாட்டின் மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் மனைவியைக் காண வேதராணியம் ஊடாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்த குற்றத்துக்காக யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 04ஆம் பக்கம் பார்க்க



7ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதை உற்பத்தி விவகாரம்
# மனம்பேரியின் வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல்

(கொழும்பு)

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பத் மனம்பேரிக்கு சொந்தமானதாகக் கூறப்படும் பேருந்து, கார் மற்றும் ஒரு கப் ரக வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மேல் மாகாண வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால், சம்பத் மனம்பேரியின் மித்தெனிய பகுதியில் உள்ள வீடு 23ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறாது நெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

British College of Higher Studies

NEW BATCHES START!!

**IELTS**

Academic / General / Life skills

**Diploma In English**

**Spoken English**

Speaking / Reading / Writing/listening

Week days & weekend days

15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.

bchsjaffna2017@gmail.com

021 222 4550 / 0778407100

(C-4296)



## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்தி, ஞானசம்பந்தர் வீதியில் 100m தூரத்தில் நல்ல சூழலில் 3 3/4 பரப்பு. நல்ல தண்ணீர் கிணறு மற்றும் நல்ல நிலையிலுள்ள வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. வசிப்பிடம், வணிக நோக்கத்திற்கு ஏற்றது.

(5866)

**076 023 3301**



## விற்பனையாளர் தேவை

கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலி பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

(5858)

**077 078 2395**

**077 131 2534**


# 662 மில்லியன் பெறுமதியான வல்லப்பட்டை பதுக்கல்

## மூவர் அதிரடிக் கைது

சட்டவிரோதமாக வல்லப்பட்டையைத் தம்வசம் வைத்திருந்த 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாத்தறை, கொட்டபொலப் பகுதியில் தெனியாய வனப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சோதனையில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 110 கிலோகிராம் 450 கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 662 மில்லியன் ரூபாவிற்கும் அதிகம் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ந-7)

# வடக்கில் இடியுடன்...

பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 15 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட கடையும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாவிற்கு அண்மையில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ். ஒஸ்மேனியா கொலிஜிற்கு அண்மையில் ஒஸ்மேனியா வீதி முகப்புடன் 6 1/2 பரப்பில் அமைந்த காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-4295)

**0777 23 25 35**



கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2430/- |

குறைந்த விலை -நிறைந்த சேவை

கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்

14 நாட்களில் Delivery

(C-4297)

UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-

Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## வேலையாட்கள் தேவை

யாழ். நகர் ஆவரங்காலில் இயங்கிவரும் அவிக்னா மோட்டார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண் /பெண் இருபாலாரும்.

- சேவிஸ் போடுபவர் (2W, 3W service boys)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- காசாளர் (Cashier)

(C-4293)

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : காலை 9.00 – மாலை 5.30 மணிவரை

அவிக்னா மோட்டார்

பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தி, யாழ்ப்பாணம். 0771748242



## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :

(5869)

**077 6954530**



## பிரத்தியேக வகுப்புக்கள்

க.பொ.த உயர்தரம் A/L

- பொருளியல்
- வணிகக்கல்வி

க.பொ.த சாதாரணதரம் O/L

- குடியியற்கல்வி
- ஆங்கிலம்
- விவசாயம்

(5844)

தனியாகவும் குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 900 7597**

**077 906 4595**


# மரண அறிவித்தல்



மலர்வு 17.02.1926

உதிர்வு 31.10.2025

## திருமதி தவமணிப்பிள்ளை மார்க்கண்டன்

### (முன்னாள் தலைவி, மாதர் முன்னேற்ற சங்கம், சுன்னாகம்)

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பெரிய பிரித்தானியா, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிப்பிள்ளை மார்க்கண்டன் அவர்கள் கடந்த (31.10.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி சின்னத்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரி அவர்களின் அருமைச் சகோதரியும் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு ஆறுமுகம் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கல்லூரி அதிபர் ஆறுமுகம் மார்க்கண்டன் (B.A, B.Sc, P.G.T) முன்னாள் அதிபர் (யா/நடேஸ்வரக் கல்லூரி, மு/வித்தியானந்தா கல்லூரி, கொ/றோயல் கல்லூரி), தமிழ்ப்பிரிவு அதிகாரி (கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பாடவிதான அபிவிருத்தி சபை, ஸ்ரீலங்கா) அவர்களின் ஆருயிர் மனைவியும் சிவநேசன் (தீனதயாளன்) (Retired Chemical Engineer), காலஞ்சென்ற பாலரஞ்சனா மகேந்திரன், பக்தவக்சலா கெங்காதரன் (Retired Chemist), திருவாதவூரன் (Retired Accountant and Attorney - at - law, Srilanka), Dr. ஆலாலசுந்தரன் (Retired Electronic Engineer), கௌரிகரன் (Accountant, Managing Director, Gayathiri Group of co, Uk) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறீரஞ்சினி, கணபதிப்பிள்ளை கெங்காதரன் (Retired Mechanical and Production Engineer), காலஞ்சென்ற சாந்தினி திருவாதவூரன், சாந்தி, சியாமளா ஆகியோரின் அருமை மாமியாரும் Dr. கார்த்திகா, Dr. சுனில் ஆனந்த், ஹரிபிருந்தாபன், ஆரதி, கனிஸ்கா, கௌரிகரன், சங்கராத்மஜன், மாயோன், தமன்னா, காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நத்தானியல், கீரன், ராதா, றேயன், மீரா, றியா, றிஷான், அன்னையா, ஆரி ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை Metropolitan Police Sports Club Ltd Hall, The Warren, Croydon Road, Bromley BR2 7AL மண்டபத்தில் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைக்காக Hither Green, Crematorium, Chappel, Verdant Ln, London SE6 1TP இற்கு பிற்பகல் 1.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மார்க்கண்டன் குடும்பத்தினர்

No.21, Woodbastwick Road,

Sydenham, London SE 26 5 LG,

England, UK

தொடர்புகளுக்கு :

0094 [illegible], +44 79 4144 2699

+44 79 5680 7180, + 44 79 8037 4442

(5867)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்கள் பட்டினியில் வாடும் போது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சிறப்புரிமை ஏன்?

## ஜனாதிபதி அநுர கேள்வி



(கொழும்பு)

**மூன்று வேளை உணவு இல்லாமல் மக்கள் வாழும் சூழலுக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அளவுக்கு மீறிய சிறப்புரிமைகள் எதற்கு என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றில் வரவு செலவு திட்ட உரையை நிகழ்த்தும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "முன்னாள் ஜனாதிபதிகளின் அளவுக்கு மீறிய சிறப்புரிமைகளை நாம் அகற்றியுள்ளோம்.

சிலர் இதை வலியாக உணரலாம் இருப்பினும் நாம் மக்களின் ஆணைக்கு அமைவாகப் பணியாற்றுகின்றோம்.

வேறு நாடுகளில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் பிரதம அமைச்சர்களுக்கும் வழங்கப்படும் சிறப்புரிமைகள் பற்றி சிலர் வாதிடுகின்றனர் எனினும், அந்நாடுகள் எமது நாட்டைப்போன்று வங்குரோத்து நிலைக்கு சென்றவையல்ல.

எமது நாட்டை துரதிஷ்டவசமாக வங்குரோத்தடையச் செய்தனர், பிள்ளைகள் பாடசாலைகளைக் கொண்டிராத ஒரு நாட்டில் மில்லியன் கணக்கான மக்கள் ஒரு வேளை கூட உணவின்றி உறங்கச் செல்லும் ஒரு நாட்டில் தமது உயிர்களைக் காப்பதற்கு மருந்து வாங்குவதற்கு வழியின்றி மக்கள் வருந்தும் ஒரு நாட்டில் அப்பாவி இளைஞர்கள் தொழிலின்றி வருந்தும் ஒரு நாட்டில் சிறப்புரிமைகளை தொடர்ந்தும் அனுபவிப்பது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நெறிமுறையொன்றாக அமையுமா ?

அதனை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்பது சாத்தியமா? பிரஜைகளுக்கும் பொதுமக்கள் பிரதி நிதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் தீர்க்கமாக மாற்றியமைத்துள்ளோம்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு மேலானவர்கள் அவர்களை அடிமைகளாக நடத்துபவர்கள் அரசர் அல்லது மாண்பு மிக்க தெய்வங்கள் என்ற அந்தஸ்த்தை மாற்றியுள்ளோம்.

இது நாம் வென்றெடுத்த சாதனையொன்றாகும், அதனை மேலும் உறுதி செய்வதே எமது இலக்காகும்.

இருப்பினும் நாம் அந்த உதாரணத்தை நிறுவியுள்ளோம், ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு உட்கொள்ளாத மக்கள் மூன்று ஊட்டச்சத்து உணவுகளை பெறக்கூடிய பொருளாதார மொன்றை உருவாக்குவதும், ஒவ்வொரு பிள்ளையும் கல்வியைப் பெறும் சூழலை உருவாக்குவதும், ஒவ்வொருவருக்கும் புகலிடம் வழங்குவதும் ஒவ்வொரு பிரஜைக்கும் ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்வதும் எமது ஏகக் குறிக்கோளாகும்" என அவர் தெரிவித்துள்ளார். (க-8)

# மஹிந்தானந்த-நளின் பெர்னாண்டோ இருவரின் மனுக்களும் நிராகரிப்பு

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்காக சதொச நிறுவனம் ஊடாக 14 ஆயிரம் கேரம் பலகைகளையும், 11 ஆயிரம் தாம் பலகைகளையும் இறக்குமதி செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு 53 மில்லியன் ரூபாய் வரையான நஷ்டம் ஏற்பட்டது.

இவ் வழக்குத் தொடர்பாகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர் அந்தத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளதால் பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்திருந்த பிணை மனுக்களைக் கொழும்பு நிரந்தர மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நிராகரித்துள்ளது. (க-8)

# நாட்டு மக்களின் நலன்கருதி சிறந்த தீர்மானங்களை ஆதரிப்போம்

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டு மக்களின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அனைத்தையும் எதிர்க்கும் மனநிலையில் நாங்கள் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2026 நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்த பெருமை முன்னாள் ஜனாதிபதி உட்பட அந்த அரசாங்கத்துக்கே சேரும். அவர்களின் உழைப்பை இந்த அரசாங்கம் தமக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுக்கொண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு விட்டதாக குறிப்பிடுகிறது.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் சிறந்த திட்டங்கள் ஏதும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப் படவில்லை. மாறாக பல போலியான வாக்குறுதிகள் மாத்திரமே இம்முறையும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே வரவு செலவுத் திட்டம் பற்றி பெரிதாக குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை.

அரச நிர்வாகம் டிஜிற்றல் மயப்படுத்தல், நிகழ்நிலை கொடுக்கல் வாங்கல் முறைமை பற்றிய முன்மொழிவுகள் வரவேற்கத்தக்கவை. புதிய மாற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டும். அப்போது தான் டிஜிற்றல் பொருளாதார பயனை பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (க-8)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது மதிப்பிற்குரிய

**பேராசிரியர். சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதக் குருக்கள்**

**(தலைவர், சமஸ்கிருததுறை, யாழ்.பல்கலைக்கழகம்)**



அவர்கள் **பேராசிரியராக** பதவி உயர்வு பெற்றதையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவர் மென்மேலும் உயர் பதவிகள் பெற வாழ்த்துகின்றோம்

BEST WISHES

**வாழ்த்துவோர்: வலம்புரி நிர்வாகம்**

# விருது வழங்கி கௌரவிப்பு



**யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்ற கனடா–யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றுகூடலின் போது மர்ஹூம் அப்துல் கபூர் ஞாபகார்த்த விருதாக யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் திருமதி.மதிவதனி விவேகானந்தராசா அவர்கள் கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து Best Social Media Journalist எனும் விருது வழங்கி கௌரவித்த போது எடுத்த படம்**

(C-4287)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர்களின் ஓய்வூதியத்தில் கடும் முரண்

## நடவடிக்கை எடுப்பேன்– சஜித் உறுதி

பி.சி. பெரேரா சம்பள ஆணைக் குழு மூலம் செயற்படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்பு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கிடைக்காமையால் சுமார் 85 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிலர் 40 ஆயிரம் ரூபா ஓய்வூதியம் பெறும் போது மற்றும் சிலர் சுமார் 120,000 ரூபா ஓய்வூதியம் பெறுகின்றனர்.

இந்தப் பாரதூரமான அநீதிக்கு எதிராக நானும் ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் எடுக்க முடியுமான உச்சபட்ச நடவடிக்கைகளை எடுத்து, நீதியை நிலைநாட்டுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் தலைமை தாங்குவோம். இது தொடர்பான முன்மொழிவுகளை இம்முறை வரவுசெலவுத் திட்ட விவாதத்திலும், குழுநிலை விவாதத்தின் போதும் முன்வைப்பேன். தேவைப்பட்டால் இலவச சட்ட உதவிகளையும் பெற்றுத் தருவேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ந-7)

## யாழ்.கடல்...

ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் முன்னெடுத்து வரும் போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கை காரணமாக, தென்பகுதியில் உள்ள பாதாள உலகக் குழுவினர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு முயற்சிக்கின்றனர்.

எனினும் கொழும்பு விமான நிலையத்தினூடாக அவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல முடியாதளவில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் வட பகுதியில் தலைமறைவாகியுள்ளனர்.

இவ்வாறு வடபகுதியில் தலைமறைவாகி இருக்கும் இவர்கள், யாழ். குடாநாட்டுக்கடல்வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்கின்றனர் என்றும் இவ்வாறே கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் சம்பந்தப்பட்டவரான செவ்வந்தியும் யாழ்ப்பாணக் கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தார் என்றும் புலனாய்வுத் துறை சுட்டிக்காட்டியுள்ளது.

புலனாய்வுத் துறையின் எச்சரிக்கையை அடுத்து வடபகுதிக் கடல் பிராந்தியத்தில் விசேட ரோந்து நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபடவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-7)

## அநுரவின்...

வரவு செலவுத் திட்டத்திலும் பார்க்க 2026 ஆம் ஆண்டில் 12 பில்லியன் ரூபாய்கள் மேலதிகமாகப் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அநுர அரசின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் 455 பில்லியன் ரூபாய்கள் பாதுகாப்புச் செலவீனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது நடப்பு ஆண்டுடன் (2025) ஒப்பிடும் போது 12 பில்லியன் ரூபாய்களால் அதிகரித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையாக ஆயிரத்து 757 பில்லியன் மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதனைச் சீர்செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட கடன் வழங்குனர்களின் உதவியை நாட வேண்டி உள்ளது.

நிலைமை இதுவாக இருக்க, யுத்தமற்ற சூழலில் இவ்வாறான ஒதுக்கீடு தேவையற்ற ஒன்றாகவே அமையும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனிடையே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை எனத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தரப்புகள் அதிருப்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. (ந-7)

## மாலைதீவில்...

போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற இலங்கை மீன்பிடிக் கப்பலை மாலைதீவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கைக் கடற்படை பகிர்ந்து கொண்ட உளவுத்துறை தகவலைத் தொடர்ந்து, ஆறு இலங்கையர்களுடன் வந்த அந்தக் கப்பலை மாலைதீவு கடலோரக் காவற்படையினர் தடுத்து நிறுத்தியதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கை இரு நாடுகளுக்கும் இடையே சமீபத்திய மாதங்களில் நடந்த மிகப்பெரிய கூட்டு கடல் சார் போதைப்பொருள் பறிமுதல் நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சந்தேக நபர்களும் கப்பலும் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள மாலைதீவு பொலிஸார் போதைப் பொருள் எங்கிருந்து வந்தது மற்றும் எங்கு கொண்டு செல்லப்படவிருந்தது என்பதைக் கண்டறிய துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தியப் பெருங்கடலை போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தி பரந்தளவிலான நாடு கடந்த போதைப் பொருள் கடத்தல் வலையமைப்பின் ஒரு பகுதியாக இந்தப் படகு இருந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ந-7)

## யாழிலிருந்து...

குறித்த இளம் குடும்பஸ்தர்,

யாழ்ப்பாணத்திலிருந்து கடல் வழியாகச் சட்ட விரோதமான முறையில் படகில் புறப்பட்டு வேதாரண்யம் கடற்கரையில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் இராமேஸ்வரம் சென்று அங்கு தங்கியிருந்த நிலையில் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பரமக்குடி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்ட விரோதமான முறையில் தமிழகத்திற்குள் நுழைந்த இலங்கை நபர் ஒருவர் இராமேஸ்வரம் பகுதியில் பதுங்கி இருப்பதாக இராமநாதபுரம் கியூ பிரிவுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் நேற்று (8) அதிகாலை இராமேஸ்வரம் பேருந்து நிலையம் பகுதியில் கியூ பிரிவு பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே இருந்த பூங்காவில் சந்தேகத்துக்கிடமாக அமர்ந்திருந்த குறித்த நபரை சோதனை செய்த போது அவரிடம் இலங்கைப் பணம், இலங்கை கடவுச்சீட்டு, இலங்கை தேசிய அடையாள அட்டை ஆகியவை உடமையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து கைது செய்யப்பட்ட குறித்த நபரை பொலிஸார் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். (ந-7,285)


பாராட்டி ஆசி வேண்டி வணங்குகின்றோம்



பேராசிரியர்

பாலகைலாசநாதக் குருக்கள்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் மகனும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரம்பரைக் குருவும் நயினை நாகபூசணி அம்மன் ஆலய பரம்பரை குருவும் யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவருமாகிய பாலகைலாசநாதக் குருக்கள் அவர்கள் சமஸ்கிருத மொழிப் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

இங்ஙனம்:-
கலாநிதி சிவஸ்ரீ நா.கலாதரக் குருக்கள்
இணுவில் கந்தசாமி கோவில்
பரம்பரை பூசகர் வழி

Congratulation

(C-4298)


## மரண அறிவித்தல்

### இராஜேந்திரம் இராமலிங்கம்



பிறப்பு 02.04.1933 இறப்பு 07.11.2025

*தொண்டைமானாறு கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் சிவிச்சென்ரர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் இராமலிங்கம் அவர்கள் கடந்த (07.11.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் சிவிச்சென்ரர் வட்டக்கச்சி எனும் முகவரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*தகவல்: குடும்பத்தினர்*
076 797 8529

(C-4299)


புதிய கடையில்

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில்,
நாவலர் மடம் கரணவாய் கரவெட்டி
என்னும் முகவரியில்

"நியூ சிட்டி" கோழிக்கடை

கோழி இறைச்சி, முட்டை மற்றும் உரித்த கோழி சுகாதார முறைப்படி சுத்தம் செய்து விரும்பிய விதத்தில் வெட்டித் தரப்படும். மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்றைய விலை புறொயிலர் உயிர்க்கோழி - 1 kg 700.00
புறோயிலர் இறைச்சி - 1 kg 950.00
உயிர்க் கோழி - 1 kg 1200.00
கல்பேற் உயிர்கோழி - 1 kg 650.00
கல்பேற் இறைச்சி - 1 kg 1000.00
பேரன்ஸ் உயிர்கோழி - 1 kg 850.00
பேரன்ஸ் இறைச்சி - 1 kg 1200.00



இவை அனைத்தும் எமது அனைத்து கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமையகம் : குருநகர், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 430 3354

(5870)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் வெற்றிடங்கள் உடன் நிரப்பப்படும்

## ஊடக அமைச்சர் உறுதி

(கொழும்பு)

**தாதியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும் வகையில், உடனடியாக தேர்வுகளை நடத்தி, விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பணியமர்த்தப்படும் என ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



தாதியர் பாடசாலைகளில் காணப்படும் தொழில் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை ஆராய்வதற்கு, சுகாதார மற்றும் ஊடக அமைச்சருக்கும் தாதியர் பாடசாலை அதிபர்களுக்கும் இடையே விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில், இந்த நாட்டில் 17 தாதியர் பாடசாலைகள் உள்ளன. மேலும் தற்போது அந்த தாதியர் பாடசாலைகளில் 216 தாதியர் ஆசிரியர்களும் 5 ஆயிரம் மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர், மேலும் எதிர்வரும் டிசம்பரிலும் 2 ஆயிரத்து 650 மாணவர்கள் பணியமர்த்தப்பட உள்ளனர்.

அதிக பணிச்சுமை காரணமாக தற்போதைய தாதிய ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை எனவும் ஒப்புதல் வழங்கப்பட்ட தாதியர் ஆசிரியர்களின் எண்ணிக்கை 395 என்றும், அதன்படி மேலும் 175 தாதியர் ஆசிரியர்கள் தேவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து கவனம் செலுத்திய அமைச்சர், உடனடியாக தேர்வுகளை நடத்தி, விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பணியமர்த்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (க-8)

# தேர்தல் வாக்குறுதியின்படி மாகாண சபைத் தேர்தலை நடத்தாதது ஏன்?

## தேசப்பிரிய காட்டம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அதன் நிர்வாகத்தை ஆளுநர் ஊடாக முன்னெடுத்து வருவது ஜனநாயக விரோதச் செயலாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தல் ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டதால், அதனை நடத்தாமல் ஆளுநர்கள் ஊடாக நிர்வாகத்தை முன்னெடுப்பது சட்டவிரோதமாகும்.

மக்கள் சபையை நிர்வகிக்க வேண்டுமெனில் மக்கள் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அவசியம் என மாகாண சபைகள் தொடர்பான வழக்கு விசாரணையொன்றில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேர்தல் நடத்தப்படாமல் அது ஒத்திவைக்கப்பட்டு வருவது ஜனநாயக விரோதமாகும்.

ஆளுங்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் ஒரு வருடத்துக்குள் பழைய முறையிலேனும் மாகாண சபைத் தேர்தலை நடத்தி இருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் பிரச்சினை எழுந்திருக்காது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குள்ள தடையை நாடாளுமன்றத்தால் மாத்திரமே தற்போது நிவர்த்தி செய்ய முடியும். எந்த முறைமையின் கீழ் தேர்தல் என்ற முடிவுக்கு வரவேண்டும்.

பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தால் அடுத்த வருடம் முற்பகுதியில் அதனைச் செய்ய முடியும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு எதிரணி வசம் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கூட இன்னும் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் உள்ளது என தெரிவித்தார். (க-8)

# கண்ணீர் அஞ்சலி



S.V.முருகேசு நிறுவனத்தில் 35 வருட காலம் பிரதான கணக்காளராக கடமையாற்றிய

## சிவராஜசிங்கம் பத்மயோகன்

(ஓய்வுபெற்ற இறைவரித் திணைக்கள வருமான வரி உத்தியோகத்தர்)

தோற்றம் 26.11.1946 — மறைவு 07.11.2025

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
உரிமையாளர், ஊழியர்கள்.

| | |
|---|---|
| S.V முருகேசு<br>154, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | SVM என்ரபிரைஸ்<br>கரடிபோக்கு சந்தி,<br>கிளிநொச்சி. |
| S.V.M (PVT) LTD<br>122, Dam St,<br>Colombo 12. | S.V.M Marketing<br>PVT LTD<br>No,56 Chetty Streeet,<br>Nallur, Jaffna. |

(C-4286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் போதை நுகர்வில் ஈடுபட்ட மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த மூன்று இளைஞர்களை , போதைப்பொருளை நுகர்வதற்காக பயன்படுத்திய மருத்துவ ஊசி, லைட்டர் , மேசைக்கரண்டி ஹெரோயின் உள்ளிட்ட பொருட்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்

யாழ்ப்பாண நகர் பகுதியை அண்டிய பகுதியில் இளைஞர்கள் ஹெரோயின் போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ் விடத்தை சுற்றி வளைத்து , போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த மூன்று இளைஞர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருள் , மருத்துவ ஊசி, லைட்டர் , மேசைக்கரண்டி உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸார் , நல்லூர் மற்றும் அரியாலை ஆகிய பகுதிகளை சேர்ந்த 32 வயதான இருவரும் , 30 வயதான ஒருவரையுமே கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (3-33)

# மருத்துவ அறிவியலில் யோகம் தியானம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையினால் நடத்தப்படும் "மருத்துவ அறிவியல் நோக்கில் யோகம் தியானம்" எனும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆயுர்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் வெற்றிவேல் சக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் "மருத்துவ அறிவியல் நோக்கில் யோகம் தியானம்" எனும் தலைப்பில் சிறப்புரையினை இந்திய முதுநிலைப் பேராசிரியர் கே.ஆர் முனிரத்தினம் நிகழ்த்தவுள்ளதுடன் ஆசியுரையினை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் கவிதா உதயகுமார் நிகழ்த்தவுள்ளார். (3)

# உதவித்திட்டம் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையில் கடமையாற்றுகின்ற 30 சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உதவிப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி கிழக்கு கைதடியைச் சேர்ந்த சமாதான நீதவான் அமரர் வை. சரவணமுத்துவின் 41ஆவது ஆண்டு நிறைவினையொட்டி உப தவிசாளர் யோகேஸ்வரனின் ஏற்பாட்டில் மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (3-30)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய "கொலஸ்திரோல் நோய்" நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் பொது வைத்திய நிபுணர் க.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. (3-60)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமானது தமது பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை முற்றாக அழித்தொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நேற்று காலை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கசிப்பு குடிப்பதற்காக பலர் கூடியிருந்த காட்டுப்பகுதி திடீரென சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் முற்றுகையிடப்பட்டது.

இந்த முற்றுகையின் போது கசிப்பு பரலை கைவிட்டு அங்கு கூடியிருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன், கசிப்புடன் கசிப்பு பரல் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-104)

# யாழில் இணைக்கும் குரல்கள் விசேட வேலைத்திட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதிலுமுள்ள பெண் தலைமைத்துவங்களுக்கிடையிலான தொடர்புகளை உருவாக்குவதன் முதற்படியாக 'இணைக்கும் குரல்கள்' - பெண் தலைவர்களுக்கான பிராந்திய பரிமாற்ற நிகழ்வு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியன தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள், கல்வி மற்றும் வணிகத் துறைகளிலிருந்தான தேசிய மற்றும் மாவட்ட ரீதியிலுள்ள பெண் தலைவர்களை ஒன்றாக இணைக்கும் நிகழ்வாக இது அமைந்ததுடன், இங்கு அனுபவங்கள், தடைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைப் பலப்படுத்துவதற்கு அடையாளம் காணப்பட்ட நடைமுறைத் தீர்வுகள் குறித்துப் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் நிலையான வழிகாட்டுதல் வலையமைப்பை உருவாக்குவதற்கும், வடக்கில் உள்ள பெண் தலைமைத்துவங்களிடமிருந்து முக்கிய விடயங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை உள்ளடக்கிய அறிக்கையை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை இந்தத் தளம் உருவாக்கியது. (3)

# ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையம் நடத்தும் ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் 7.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மைய நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.எஸ். இரத்தினவேல் "பொறுப்புக்கூறலும் சுயாதீன் வழக்குத் தொடுநர் தொடர்பிலான விவாதமும்" எனும் தலைப்பில் சிறப்புக் கருத்துரையை வழங்குவார்.

தற்போதைய சூழலில் அரசியலமைப்பாக்கச் செயன்முறையில் தமிழர் அணுகுமுறை எவ்வாறு இருத்தல் வேண்டும்? எனும் தலைப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர். (3)

# புதிய கல்வியாண்டின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் 2026 ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் தர மற்றும் டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறியை பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 4.12.2025 இற்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களை dtet.gov.lk எனும் இணையத் தளத்தில் பார்வையிடலாம் அல்லது தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ அல்லது 021 221 2403, 021222 2358 எனும் தொலைபேசி இல்கங்களினூடாக பெற்றுக் கொள்ள முடியும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 518
09.11.2025


# பட்ஜெட் - 2026



# பலன் தருமா?

அபிமன்யு

**“வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோலுயரும் கோலுயரக் கோன் உயர்வான்” என்பதன் பொருள் விளங்கி அநுர அரசு செயற்பட்டால் நிச்சயம் வெளிநாடுகளிடம் இலங்கை பெற்ற கடனைச் செலுத்தியே தீரும்**

“புதிய மொந்தையில் பழைய கள்” இந்தச் சொற்பதத்தை வரவு செலவுத்திட்ட அறிக்கையை விமர்சிப்பதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற எழுதா விதி இருப்பது போல வரவு செலவுத்திட்டத்தை விமர்சிப்பதைத் தவிர இச் சொற்பதம் வேறு எந்த விடயத்திற்கும் பயன்படுத்துவது அருகிவிட்டது என்றே கூறவேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் இரண்டாவது பட்ஜெட் இது. இந்த பட்ஜெட் எவ்வாறு இருக்கப் போகிறது எனும் எதிர்பார்ப்பு நாட்டு மக்களிடம் இருக்கவே செய்தது.

அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதான வரவு செலவுத்திட்டமாக 2026ஆம் ஆண்டுகான வரவு செலவுத்திட்டம் இருப்பதை உணரக்கூடியதாக இருந்தபோதிலும் நாட்டின் செலவீனம் வருமானத்தைவிட அதிகரித்தே காணப்படுகின்றமை வேதனைக்குரியது.

அந்தவகையில் இந்த வருட வருமானம் 5300 பில்லியன். செலவீனம் 7057 பில்லியன். எனவே துண்டுவிழும் தொகை 1757 பில்லியனாக இருக்கின்றது.

வரவு செலவுத்திட்ட உரையில் அநுரகுமார பல்வேறு விடயங்களைப் பேசியிருந்தார்.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வு, அவர்களுக்கான பண்டிகைக்கால கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மஹாபொல ஊக்குவிப்புத் தொகை 2500ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2500 வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்பிற்கும் பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும்போதை ஒழிப்பு செயற்திட்டத்திற்காக 6 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலான நடைமுறையில் அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1350ஆக இருந்த தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1750 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் 200 ரூபா தோட்டக் கம்பனிகளும் 200 ரூபா அரசாங்க நிதியிலும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதங்கள் ஆரம்பமாகியிருக்கின்ற நிலையில் ஜனாதிபதியின் உரை எதிர்க்கட்சியினருக்கு கடுப்பேற்றுவதாய் அமைந்து இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

நாங்கள் கடந்த ஆண்டு ஆட்சியைப் பொறுப்பேற்கும் போது ஒரு வருடம்கூட இந்த அரசாங்கத்தால் தாக்குப் பிடிக்க முடியாது. இன்னும் ஒரு வருடத்தில் இந்த நாடு வேறு ஒரு ஜனாதிபதியைச் சந்திக்கும் என்று விமர்சித்திருந்தனர்.

அவர்களுக்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். எதிர்வரும் 2028 ஆம் ஆண்டும் நாம் தான் ஆட்சி செய்யப் போகிறோம்.

மேலும் இலங்கையின் கடனைச் செலுத்தி முடிப்பதும் எமது அரசாங்கம்தான் என்று கூறினார்.

அத்துடன் ஊழல்வாதிகளைச் சட்டத்தின் முன்நிறுத்தும்போது என்னைக் “ஹிட்லர்” என்று எதிர்க்கட்சியினர் விமர்சிக்கின்றனர்.

நான் “ஹிட்லர்” எனின் எதிரணியில் யார் ரஷ்யா? யார் அமெரிக்கா? ரஷ்யா, அமெரிக்கா இணைந்து ஹிட்லரைத் தோற்கடித்தது வரலாறு.

ஆனால் எதிரணியினர் எவ்வாறான வரைவிலக்கணத்தை வழங்கினாலும் ஊழலுக்கும் ஊழல்வாதிகளுக்கும் எதிரான போரை நான் கைவிடப்போவதில்லை என இடித்துரைத்தமை ஆளும் தரப்பை உற்சாகப்படுத்துவதாய் அமைந்திருந்தது.

எதிரணியினரிடம் நான் ஒரு கேள்வியை முன்வைக்கின்றேன். என்னை விமர்சியுங்கள். இந்த அரசை விமர்சியுங்கள். ஆனால் நாட்டில் உள்ள பட்டினியை ஒழிக்கவும் போதையை ஒழிக்கவும் தயவுசெய்து அரசுடன் இணைந்து செயற்படுங்கள். அப்போதே இந்த நாடு மீட்சிபெறும் என்றார் அவர்.

வரவு செலவுத்திட்டம் எவ்வாறு இருந்தாலும் அதை எதிர்ப்பது எதிர்க்கட்சியின் கடமை என்ற எழுதா விதிக்கமைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வரவு செலவுத்திட்டம் தொடர்பில் பேசியிருந்தார்.

இந்த வரவு செலவுத் திட்டம் யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு முன்வைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமாகத் தெரியவில்லை.

நாட்டு மக்கள் இன்று பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களின் வளர்ச்சிக்கு இந்த பட்ஜெட்டில் இடம்கொடுக்கவில்லை.

எனவே பொய்கள், பித்தலாட்டங்கள் இந்த பட்ஜெட்டில் நிறைந்துள்ளன என அவர் தெரிவித்திருந்தார்.

நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரத் தொடங்கியிருப்பது புலனாகிறது.

2019ஆம்ஆண்டு பொருளாதார நெருக்கடியுடன் ஒப்பிடுகையில் தற்போது மேலும் பல படிகள் முன்னேறியிருப்பதை விகிதாசார வடிவில் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் நாட்டின் ஊழல், போதைவஸ்து என்பவற்றை ஒழிப்பதன் மூலம் நாடு இன்னும் முன்னோக்கி நகரும் என்பதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை.

இவ்விரு விடயத்திலும் அநுர அரசு அதிக அக்கறை காட்டிவருகின்றமை நாட்டை மேலும் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரச் செய்யும்.

இந்த அரசின் வரவு செலவுத் திட்டம் சரியானதா?, பிழையானதா? என்பதற்கு அப்பால் போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு என்பன பாராட்டும் வகையில் உள்ளதை நாம் நினைவுகூர்ந்தே ஆக வேண்டும்.

2028ஆம் ஆண்டும் நாங்களே ஆட்சியமைப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா கூறியதற்குள் இருக்கும் நம்பிக்கையைக் கட்டிக் காப்பதற்கு தொடர்ந்து மக்கள் விரும்பும் செயற்றிட்டங்களைச் செய்தாக வேண்டும். அத்துடன் அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அப்போதே அதற்கான பிரதிபலன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## பளை பஸ் தரிப்பு நிலையத்தில் பயணிகள் இருக்க முடிவதில்லை

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** ஜனாதிபதி அநுர முன்வைத்த வரவு செலவுத் திட்டம் எப்படி இருக்குதாம்.

**பண்டிதர்:-** நாடு பொருளாதாரத்தில விழுந்து போன நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டம் திருப்தியானதென்று தான் சொல்ல வேணும்.

அதிலும் மாணவர்களின் கல்விக்கான நிதி உதவிகள் மற்றும் கல்விக்கான கடன் வசதிகள் சமூக நலன் சார்ந்த செலவுகளாக இருப்பது இன்னும் மன ஆறுதலைத் தருகிறது.

அதேநேரம் நாடு பொருளாதாரத்தில விரைவில் முன்னேற்ற மடையும் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அரசாங்கத்தினது ஆடம்பரச் செலவுகளைக் கணிசமாகக் குறைப்புச் செய்தமை உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

**கங்காணி:-**அதெண்டால் உண்மை தான். முன்பெல்லாம் அரசாங்கத்தின்ர ஆடம்பரச் செலவுகள், அரச தலைவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான செலவுகள் அதித தொகையாக இருந்தது.

ஆனால் அநுரவின்ர ஆட்சியில அத்தகைய செலவுகள் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக செலவுச் சிக்கனம் என்பது பற்றி ஏனைய அரச நிறுவனங்களும் அதீத கருசனை கொள்ளும் என நம்பலாம். இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அது சரி. சில மாதங்களுக்கு முன்னர் நடந்த யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில, வீதி திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு ஜனாதிபதி அநுர கூறியிருந்தவர்.

அந்த நிதி ஒதுக்கீட்டில மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதி திருத்தப்படும் என நம்பினம்.

ஆனால் அது நடக்கவில்லை. இனி 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலயாவது, அந்த வீதி அமைக்கப்படுமா? என்பது தான் தெரியாமல் இருக்குது.

**வாத்தியார்:-** அப்ப 2026 இல் மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதியை புனரமைக்க யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆவன செய்ய வேணும் எண்டொரு கோரிக்கையை முன்வைப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற,அந்தக் கோரிக்கை ஆலடியில் ஏகமனதாக நிறைவேறியது.

**சிறாப்பர்:-** அதோட வாத்தியார் சில வீதிகளின்ர திருத்தப் பணிகள் அரையும் குறையுமாக இருக்கிறதைக் காண முடிகிறது.

கொட்டடி வில்லூன்றிச் சந்தியில இருந்து தெற்கு நோக்கிய காரைநகர் வீதி படு மோசமாகக் காணப்படுகிறது.

சனநெருக்கடி அதிகமாக உள்ள அந்த வீதி குன்றும் குழியுமாக இருப்பதால, மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டியதாக உள்ளது.

ஒரு சிறு தூரம் வரையிலான அந்த வீதி புனரமைக்கப்படாமையால், புனரமைக்கப்பட்ட வீதியின்ர பெறுமதியும் உணரப்படாமல் போகிறது.

எனவே இது பற்றியும் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில எடுத்து நிறைவுறாத வீதிப் புனரமைப்புகளை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேணும்.

**சாத்திரியார்:-** வீதிப் புனரமைப்பு எண்டு சொல்லத் தான் ஞாபகம் வருகுது.

பளையில் பெரிய பஸ்தரிப்பு நிலையம் கட்டப்பட்டிருக்குது.

ஆனால் அந்த பஸ் தரிப்பு நிலையத்தில பயணிகள் இருப்பதில்லை.

இவ்வாறு சாத்திரியார் கூற, இடையில் குறுக்கிட்ட மூப்பர் அப்ப பளை பஸ் தரிப்பு நிலையத்தில ஆரு சாத்திரியார் இருக்கினம்.

**சாத்திரியார்:-** பளை பஸ்தரிப்பு நிலையத்தில பயணிகள் இருப்பதில்லை. அவ்வாறான நிலைமைக்குக் காரணம் ஏ-9 வீதியால வாற பேருந்து வண்டிகள் பளை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில செல்வதில்லை.

இதனால ஏ- 9 வீதியில உள்ள ஒரு மருத மரத்துக்குக் கீழ கால் கடுக்கப் பயணிகள் நிற்கிற பரிதாபம் தொடருது.

எனினும் இது பற்றி எவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

பளையில் மிக அழகான பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அது பயணிகளுக்கு உதவவில்லை.

சில வேளை கால் உளையுது எண்டு பஸ் தரிப்பு நிலையத்தில இருந்தால், அவ்வளவு தான். பஸ் - ஏ-9 வீதியால பறந்து போயிரும்.

ஆகையால ஏ-9 வீதியில பயணிக்கிற இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் பளை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் சென்று பயணிகளை ஏற்றி- இறக்க வேணும்.

இதனை வட பிராந்திய போக்குவரத்து நிர்வாகம் கவனிக்க வேணும்.

அத்தோட எங்கட பளை பிரதேச சபைத் தவிசாளரும் இது விடயத்தில நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு ஆலடியில ஒரு கோரிக்கையை முன்வைப்பம்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந்தக் கோரிக்கையை ஆலடி மாநாடு ஏகமனதாக ஆமோதித்தது.

**சிறாப்பர்:-** இப்ப வீதி எங்கும் பொலிஸார் நிறுத்தப்பட்டு வாகனங்களைப் பரிசோதிக்கின்ற வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதிலும் ஒரு மகிழ்வான செய்தி, யாழ்ப்பாண நகரத்தில உள்ள சமிக்ஞை விளக்குகள் பொருத்தின இடங்களில ஒவ்வொரு பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இது ஒரு நல்ல விடயம். பொதுவில காலை வேளையில பாடசாலைக்கு லேற்றாகப் போகுதெண்டு சிவப்பு சமிக்ஞை விளக்கு எரிகிற போதும் சிலர் வாகனங்களை வேகமாக எடுப்பினம்.

இதால உயிராபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்குது.

இன்னும் சிலர் வேம்படிச் சந்தியில பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு சிக்னல் லைட் பற்றிப் பொருட்படுத்தாமல் ஒரே இழுவை.

இந்த அந்தரமான வேலைகளால சிக்னல் பொயின்டுகளில விபத்துக்கள் நடக்கக் கூடிய ஆபத்துக்கள் இருந்தன.

ஆனால் இப்ப அந்த இடங்களில முக்கியமான நேரங்களில் பொலிஸார் கடமையில் ஈடுபடுவது விபத்துக்களைத் தவிர்க்க உதவியாக இருக்குது.

**விதானையார்:-** ஓ! இப்ப பொலிஸார் கடுமையாகத் தான் இருக்கினம். பொலிஸாரின் சேவை நேர்மையாக இருந்தால், எல்லாம் ஒழுங்காக நடக்கும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**கொலை, கழவு, கொள்ளை இன்னும் என்னென்னத்தையெல்லாம் பார்க்கப் போகிறோமோ வியாசரே?**

சிவம் - வதிரி

என்ன செய்வது இந்த உலகம் வன்மம் நிறைந்ததாக மாறிவிட்டது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தான்.

ஒரு குடும்பப் பெண்ணை ஆசை வார்த்தைகள் கூறி அழைத்துச் சென்று அவளுக்கு மயக்க மருந்து கொடுத்து அவளின் நகைகளை அபகரித்து விட்டு அவளைக் கொலை செய்து அவளை அடையாளம் காணாதபடி முகத்தை எரியூட்டி கடலில் வீசிச் சென்ற கொடுமை யைக் கேட்கும் போது , சிவசிவா ஏன் இந்த நரக உலகை இன்னும் அழிக்காமல் வைத்திருக்கின்றாய் என்று எண்ணத் தோன்றுகின்றது.



பாட்டிக்குச் சுட்ட பழம் கொடுத்த வேலனை வேடிக்கை வேலன் ஆக்கி விட்டனரே வியாசரே?

**ஆடு வெட்டுற கத்தி ஆளையும் வெட்டும் என்ற வார்த்தை தொடர்பில் வியாசரின் கருத்து?**

சேனாதி - மருதனார்மடம்

நாகம் இல்லாத ஊரில் நாக்கிளிப் புழுக்கள் படமெடுத்து ஆடியதாம் என்றொரு சொல்லாடல் உண்டு.

தாய் நாட்டிற்காக தன் நெஞ்சில் வெடி மருந்தைக் கட்டிக்கொண்டு எதிரியின் பாசறை தேடிச்சென்று வெடித்துச் சிதறிய வீர காவியங்கள் பிறந்த மண்ணில் இப்படிப்பட்ட ஈனப்பிறவிகளும் பிறந்திருக்கின்றனரே என்று நினைக்க வெட்கமாக இருக்கின்றது.

இருக்க வேண்டியவர்கள் இருந்திருந்தால் வாள்வெட்டுக்குழுக்களுக்கு வாய் பிழந்திருக்கும்.

**இந்திய கிரிக்கெட் வீர, வீராங்கனைகளின் விஸ்வரூப வளர்ச்சி பற்றி?**

ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்

உலக வரலாற்றில் முதன்முறையாக இந்திய மகளிர் அணி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கின்றது.

இந்த வெற்றியை இந்தியாவைத் தாண்டி உலகமே கொண்டாடி வருகிறது. அவ்வளவு உன்னதத் தருணமாக இதைப் பார்க்கப்படுகின்றது. கிரிக்கெட் வரலாற்றில் முறியடிக்க முடியாத பல சாதனைகளின் சொந்தக்காரராக இந்திய வீரர்கள் இருப்பது இந்தியாவின் கிரிக்கெட் மீதான மதிப்பையும் அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டுகின்றது.

வெற்றி என்பது தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்வதே. தோல்வியின் படிகளை கடந்தே இந்தியா இந்த உயரத்தில் நிற்கிறது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

**போதையை முற்றாக ஒழிக்க போராடும் அரசிற்கு பொதுமக்கள் , அரசியல் வாதிகள், தொண்டு நிறுவனங்கள் எவ்வாறு பங்களிக்க வேண்டும்?**

சாயிசெல்வம்-பருத்தித்துறை

போதைவஸ்து வியாபாரிகளைக் காட்டிக் கொடுத்தால் அதனூடாக தமக்கு வீண் சிக்கல் வந்துவிடுமோ என்ற பயம் பொது மக்களுக்கு.

தமது நிழலிலேயே போதை வியாபாரத்தை மேற்கொண்டவர்கள் அகப்பட்டால் தங்கள் பெயரை கக்கிவிடுவார்களோ என்ற பயம் அரசியல்வாதிகளுக்கு.

போதையை ஒழித்தால் எமக்கு புறப்போசல் வராதே என்ற கவலை கலந்த பயம் தொண்டு நிறுவனங்களுக்கு.

**செவிடன் காதில் சங்கு என்பது எமது அரசியல்வாதிகளுக்கு பொருந்துமா வியாசரே?**

ஈஸ்வரநாதன் - சாவகச்சேரி

நன்றாய்ப் பொருந்தும். எம் தேசத்து அரசியல்வாதிகள் எந்த லோகத்தில் இருக்கிறார்கள் என்றே புரியவில்லை.

மக்கள் பணி செய்ய ஆயிரம் வழி இருந்தும் அதை விடுத்து தமது சுயநல அரசியலை தூக்கிப்பிடித்தபடி கட்சிகளை உடைத்து அதில் தமக்கொரு குழுவை உருவாக்கி அந்தக் குழுக்களுக்கு தலைமைதாங்கி அவர்களை ஏவிவிட அவர்களோ கிடைக்கும் ஜந்து- பத்துக்கு கூவு கூவென்று கூவுகின்றார்கள்.

பட்டால்தான் தெரியும் என்பார்கள். இவர்கள் பட்டும் திருந்தவில்லை என்பது தான் வேதனை.

**எனது மனைவியின் பெயர் பூமலர் ஆனால் அவளில் பூவாசம் வரவில்லையே ?**

தவராஜன் - கொற்றாவத்தை

பூவின் ஒத்த சொல் மலர். மலரின் ஒத்த சொல் பூ.

பூ மணக்கும் என்று மலரும் மலர் மணக்கும் என்று பூவும் நினைத்திருக்கும் போல அதனால் பூமலர் வாசம் வீசவில்லைப் போலும். அது சரி தவராஜன் உங்கள் மனைவியின் பெயர் பூமலர் இல்லையாமே?

இதன்பின் வரும் விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல

**கோவிலில் சாமியைக் கும்பிட வந்தவர்கள் எல்லோரும் கை கூப்பிக் கும்பிடுவதற்குப் பதில் கைத்தொலைபேசியைத் தூக்கிப் பிடிக்கின்றனரே வியாசரே?**

கு.லோகிதா - யாழ்.பல்கலை

எப்போது சாமிகள் காட்சிப் பொருள் ஆயினவோ அப்போதே பக்தி காணமாமல் போய் விட்டது. எப்போது கோயில் திருவிழாக்கள் களியாட்டங்கள் ஆகினவோ அப்போதே எம் கலாசாரங்கள் காவுவாங்கப்பட்டுவிட்டன.

எப்போது கோவில்கள் பூட்டப்பட்டனவோ அப்போதே எம் ஒற்றுமை பிழவுற்றது.

எப்போது ஆலயங்களில் cctv பொருத்தப் பட்டதோ அப்போதே இறைபக்தி என்ற பயம் இல்லாது போய்விட்டது.

எப்போது ஆலய அறங்காவலர்கள் நீதிமன்ற படி ஏறத் தொடங்கினரோ அப்போதே எம் ஒற்றுமை என்ற சின்னம் உடைத்தெறியப்பட்டுவிட்டது.

**பாட்டிக்குச் சுட்ட பழம் கொடுத்த வேலனை வேடிக்கை வேலன் ஆக்கி விட்டனரே வியாசரே?**

மகாலட்சுமி - உரும்பிராய்

வேலவா. வேல் கொண்டு சூரனை வதம் செய்த வீரா. வதம் செய்த சூரனை சேவலும் மயிலுமாக்கிய மால்மருகா.

உலக ஆணவத்தை கூர்வேலால் அழித்து வேலை அறிவுக்கு ஒப்பானது என்று பறை சாற்றிய பாமரா. இன்று உன்னையும் உன்னுடன் போரிட்ட சூரனையும் வைத்து குறளி வித்தை காட்டும் மூடர் நெஞ்சில் உன் வேல் பாயாது போனது ஏனடா?

பதில் சொல்லடா முருகா? நல்ல பதில் சொல்லடா? பரம்பொருளே. தந்தைக்கு உபதேசம் செய்த அரும்பொருளே பதில் சொல்லடா?

**இந்த அரசை வீழ்த்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைகிறதாமே?**

தவேது - வவுனியா

நாட்டு மக்களின் நலனுக்காக ஒன்று சேராதவர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒன்று சேராதவர்கள்.

நாட்டில் போதை ஒழிக்கப்பட வேண்டும் என்று ஒன்று சேராதவர்கள்.

சிங்கப்பூராய் இலங்கையை மாற்றுவோம் எனச் சிந்தித்து செயற்பட ஒன்று சேராதவர்கள் இந்த அரசை வீழ்த்த ஒன்று சேர்கின்றார்கள் என்றால் அதன் பொருள் என்ன?

ஒன்று சேர்பவர்கள் நாட்டு மக்களை மடையர்கள் என்று நினைக்கின்றார்கள் போல.

ஒத்தாசை புரியவிட்டாலும் உபத்திரம் தராமல் இருந்துவிடலாமே மிஸ்டர் எதிர்க்கட்சியினர்.



இந்திய கிரிக்கெட் வீர, வீராங்கனைகளின் விஸ்வரூப வளர்ச்சி பற்றி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்
# மர்ம முடிச்சுக்கள் அவிழுமா?



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

ஈஸ்ரர் குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளாய் இருந்தவர்களை அடையாளம் கண்டு கொண்டதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்ததாக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தன. விசாரணை நடந்து கொண்டிருக்கும் - இலங்கையை உலுக்கிய மிலேச்சத்தனமான ஒரு கோரத்தைப் பற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் நடந்த ஓர் உரையாடலை வெளியே கசியவிட்ட பெருமை முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நிஜாம் காரியப்பரையே சார்ந்தது. விமல் ரத்நாயக்க, தயாசிறி ஜயசேகர, சவிந்திராணி கிரியால, நிஜாம் காரியப்பர் என்ற அந்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழு அங்கத்தவர்கள் அப்போது பிரசன்னமாகி இருந்திருக்கிறார்கள். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி உறுதிப்படுத்தும் பொருட்டு ரவி செனவிரத்ன குழுவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். ரவி செனவிரத்னவின் புகைப்படம் தாங்கிய வண்ணம் ஈஸ்ரர் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டனர் என விசேட செய்திகள் வெளிவந்திருந்தன.

இதுபற்றி நிஜாம் காரியப்பரை தவிர வேறு யாரும் வாயே திறக்கவில்லை. நிலைமையின் விபரீதம் வீரியமடைந்திருந்த நிலையில் ஊடகங்கள் இந்தச் செய்தியை ஊடக விஸ்தீரணமாக்கியிருந்தன. தெரிவுக் குழுவுக்குள் நடந்த உரையாடலை நிஜாம் காரியப்பர் வெளியே கசியவிட்டது தவறு என்று அப்போதே தயாசிறி ஜயசேகரவே ஒப்புக்கொண்டார்.

ரவி செனவிரத்னவினுடைய கூற்று இந்தப் பயங்கரத்தின் மூளையாய் இருந்தவர்கள் யார் என்று எமக்குத் தெரியும். காலக்கிரமத்தில் ஆதாரங்களுடன் அனைத்தும் வெளிவரும் என்பதுதான். இதை உடனடியாக ஊடக சந்திப்பு ஒன்றைக் கூட்டி நிலைமையை பகிரங்கப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அப்படி எதையும் செய்யவில்லை. ஏதோ ஒன்றுக்குத் தருணம் பார்த்துக் காத்திருப்பதுபோல தான் தெரிகிறது. இந்த நிலையில்தான் பாராளுமன்றத்தினுடைய தெரிவுக்குழுவில் ரவி செனவிரத்ன இது பற்றிப் பேசியிருந்தார்.

ஓர் உயர் அதிகாரியினுடைய தனிப்பட்ட பாதுகாப்புப் பற்றி எந்தவித அக்கறையும் இல்லாமல் இப்படி அவர் சொன்னார். ஈஸ்ரர் விடயம் சரி என்னும் பொருள்பட சமூக ஊடகத்தில் பரப்பி ஒரு நேர்காணலைப் பகிரங்கப்படுத்துவது எந்தவிதத்தில் சரியாக இருக்கமுடியும். பாராளு மன்றத்தில் இதுதொடர்பாக விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது ஈஸ்ரர் குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ரவி செனவிரத்ன தெரிவித்திருப்பதாக நிஜாம் காரியப்பர் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை போட்டுப் பதற்றத்தை ஏற்படுத்தினார்.





இதனால் விடயம் மேலும் சிக்கலானது. யார் அந்த சூத்திரதாரி என்று ஆளாளுக்குக் கேள்வி கேட்கத் தொடங்க சமூக ஊடங்களில் பொய் வதந்திகள் வேகமாகப் பரவின. இந்தச் சதியின் பின்னணியில் இந்தியா இருப்பதாக ரவி செனவிரத்ன தெரிவித்ததாக சமூக ஊடங்களில் பரவியும் இந்தச் செய்தி பொய்யானவை எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மறுப்பறிக்கை விடுத்தது.

இங்கே ரவி செனவிரத்ன சொன்ன விடயங்கள் ஒன்றும் புதுமையானவை அல்ல. ரவி செனவிரத்ன ஆரம்ப நாட்களில் இந்த விசாரணைகளை நடத்தியவர். சிஐடிக்கு அவர் பொறுப்பாக இருந்தபோது ஷானி அபயசேகர சிஐடியின் பணிப்பாளராக இருந்தவர். ரவி செனவிரத்ன 2019 ஆம் ஆண்டு பணி ஓய்வுபெற்றுச் செல்ல இருந்தபோது அப்போதைய ரணில் - மைத்திரி அரசு, ரவி செனவிரத்ன ஈஸ்ரர் குண்டுத்தாக்குதலின் விசாரணைகளில் மும்முரமாய்க் கவனம் செலுத்தியிருந்ததால் அவருக்குச் சேவை நீடிப்பை வழங்கியிருந்தது. ஆனால் 2019இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபாய ராஜபக்ஷ வென்றதும் பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க முன்னர். ஷானி அபயசேகரவை காலி மாவட்டத்திற்கு இடம்மாற்றி பதவியிறக்கியிருந்தார். மேலும் 100இற்கும் அதிகமான சிஐடி அதிகாரிகள் கலைந்துபோன சீட்டுக்கட்டுக்களாக இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

ரவி செனவிரத்னவின் பதவியும் 31.12.2019 ஆண்டு முடிவுக்கு வந்தது. கோட்டாபய அரசு அமைத்த ஜனாதிபதி விசாரணைக் குழுவுக்கு ரவி செனவிரத்ன 20.11.2020 ஆண்டு அழைக்கப்பட்டார். ரவி செனவிரத்ன அன்று வழங்கிய வாக்கு மூலம் மட்டுமே 163 பக்கங்களுக்கு மேல் இருக்கும். ரவி செனவிரத்ன ஐந்து வருடங்களுக்கு முன்பே இது ஒரு சதி என்றும், இந்த சதியினுடைய முக்கியமானவர்களை நெருங்க உத்வேகத்துடனும் இருந்தார் என்றும் புரிந்துகொள்ள முடியும்.

“சஹ்ரான் குழுவுக்கும், ஐஎஸ் அமைப்புக்கும் பொருளாதார ரீதியிலான கொடுக்கல் வாங்கல்களோ அல்லது வேறு எந்த வடிவிலான கொடுக்கல் வாங்கல்களோ இருந்ததாக உங்கள் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டதா?” என்று ரவி செனவிரத்னவிடம் கேட்டார் அப்போதைய அரச சட்டத்தரணி சஞ்சீவ திஸாநாயக்க. “இல்லை. எனக்கு அப்படி எந்த விபரமும் கிடைக்கவில்லை. நான் 2019 கடைசிவரை இந்த விசாரணைகளை நடத்தியிருந்தேன். தற்கொலைக் குண்டுதாரிகளான இப்ராஹிமின் புதல்வர்களிடமிருந்து பணப்பரிமாற்றம் நடந்த 41 இளைஞர்களின் வங்கிக் கணக்குகளை தடை செய்ய நடவடிக்கை எடுத்தேன்.

வெளிநாடுகளில் உள்ள இயக்கங்களின் மற்றும் நபர்களிடமிருந்து அப்படி ஏதும் வந்ததாக நாம் விசாரணை செய்யும் வரை எதுவும் பதிவாகவில்லை” என்றார் ரவி செனவிரத்ன. அப்போது சஞ்சீவ திஸாநாயக்க ஒரு தாளில் பெயரொன்றை எழுதி ரவி செனவிரத்னவிடம் காட்டினார். பின்னர் கேள்வியைத் தொடுத்தார். “நான் இங்கே காட்டிக் கொண்டிருக்கும் பெயருக்கும் சஹ்ரானுக்கும் இடையில் ஏதாவது சம்பந்தம் இருப்பதாக உங்கள் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டதா?” என்று ரவி செனவிரத்னவிடம் கேட்டார் சஞ்சீவ திஸாநாயக்க. “இப்படி சம்பந்தம் இருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது உண்மை. நாம் இதுபற்றி நீண்ட விசாரணை ஒன்றை நடத்தியிருந்தோம். இதன்போது நீங்கள் சொல்லும், எமக்கு அண்மையில் இருக்கும் நாட்டிற்குள் உள்ள இந்தப் பெயருடன் சஹ்ரான் தொடர்புகளை வைத்திருந்ததற்கான எந்தவொரு ஆதாரத்தையும் எம்மால் உறுதி செய்யமுடியவில்லை”, என்று பதிலளித்திருந்தார் ரவி செனவிரத்ன.

இதன்போது ஜனாதிபதி செயலக தலைவர் ஜனார்த்தன சில்வா, ரவி செனவிரத்னவிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார். ரவி செனவிரத்ன அந்த கேள்விக்கு அன்று கொடுத்த பதிலுக்குப் பலரும் தலைசுற்றி விழாத நிலைமைதான்.

அப்படி என்ன கேள்வி - பதில், ஈஸ்ரர் அன்று தாக்குதல் நடத்த ஏதாவது ஒரு காரணத்தால் இந்த குரூரர்களுக்கு முடியாது போயிருந்தால் இவர்களுக்கு முறையாய் பாதுகாப்பு வழங்கி சம்பவ இடங்களிலிருந்து இவர்களை அப்புறப்படுத்தி வதிவிடங்களை வழங்க ஏற்பாடு இருந்ததா என்று ஜனார்த்தன சில்வா கேள்வி கேட்டார்.

அதற்குப் பதிலளிக்க ரவி செனவிரத்ன ஒரு பேப்பரும் பேனாவும் கேட்டார். ஒரு பெயரை எழுதினார். ரவி செனவிரத்ன. அப்படி யாருடைய பெயரை எழுதினார். மிகப்பெரிய கேள்வி இது.

ரவி செனவிரத்ன யார்? அவரது பின்புலம் என்ன எதுவும் தெரியாத காரியப்பர் இதைப் பகிரங்கப்படுத்தி மகிழ்ச்சி அடைந்திருந்தாலும் ரவி செனவிரத்ன இதையெல்லாம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதி ஆணைக்குழுவில் பேசிவிட்டார் என்பதே நிஜம்.

இப்போது பல கோணங்களில் விசாரைணை நடக்கிறது. சில அனுமானங்கள் சரியாகுகின்றன. சில சந்தேகங்கள் தீர்ந்திருக்கின்றன.

பிள்ளையானின் கட்சியின் இணைப்பாளராக இருந்த அசாத் மௌலான சனல் 04 இற்கு வழங்கிய சர்ச்சைக்குரிய நேர்காணல் தொடர்பாக நடக்கும் விசாரணைகளும் தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளன.

காடினலும் கத்தோலிக்க சமூகமும் இந்த விசாரணைகள் தொடர்பாக இப்போது நம்பிக்கையோடு பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ரவி செனவிரத்ன அன்று பேப்பரில் எழுதிக்கொடுத்த பெயருடன் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களுடன் கோர்த்துப் பார்த்தால் ஒன்றுமட்டும் சொல்ல முடியும்.

அதுதான் இன்று சிலருக்கு இதை எல்லாம் பார்க்கும்போது இருப்புக் கொள்ளவில்லை. ரெம்பவே பதற்றம் அடைந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒரு உதவிதான்!



“கஷ்டம்” என்று வந்து நிற்கின்ற எல்லோருக்கும் நம்மால் உதவ முடியுமா? அந்த நேரங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்? வழிகாட்டுகிறது ஒரு நீதிக்கதை!

ஒருவர், குடும்பத்தோடு புனித யாத்திரைக்குச் சென்றிருந்தார். அது, வாகன வசதிகள் அதிகம் இல்லாத காலம். காசிக்குப் போய் கங்கையில் நீராடி, விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசித்தார்கள். யாரோ சொன்னார்கள் என்று வனப்பகுதியில் இருந்த ஒரு சிவன் கோயிலுக்கு நடைப்பயணமாகவே போனார்கள். தரிசனம் முடிந்தது. ஓரிடத்தில் அமர்ந்து உணவு உண்டுகளைப்பாறினார்கள்.

உணவு உண்டதாலா, வெயில் காரணமாகவா தெரியவில்லை. எல்லோருக்கும் அப்படி ஒரு தாகம். கொண்டு போயிருந்த நீரும் தீர்ந்து போயிருந்தது. ஒரு நீர்நிலையும் கண்ணில்படவில்லை. அலைந்து திரிந்ததில் ஒரு குடில் தெரிந்தது. அங்கே ஒரு துறவி. அவரிடம் அவருக்குத் தேவையான தண்ணீர்தான் இருந்தது.

“வடக்குப் பக்கமாக கொஞ்ச தூரம் சென்றால் ஒரு ஆறு இருக்கிறது” என்று வழி சொன்னார் துறவி. அந்த மனிதர், மனைவியையும் குழந்தைகளையும் துறவியிடம் விட்டுவிட்டு ஒரு வாளியை எடுத்துக்கொண்டு போனார்.

தெளிந்த நீரோடு ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆசை தீர நீரை அள்ளிப் பருகினார். வாளியில் நீரை நிரப்பிக் கொண்டார். திரும்பி நடந்தார். பாதி தூரத்தில் ஐந்து பேர். அத்தனை பேர் முகத்திலும் களைப்பு, தாகம் தெரிந்தது. அந்த மனிதர் யோசிக்கவே இல்லை. தன் வாளியில் இருந்த நீரைக் கொடுத்தார். திரும்ப ஆற்றுக்கு வந்து வாளியில் நீரை நிரப்பிக் கொண்டார்.

வழியில் நான்கு பேரைப் பார்த்தார். அவர்களுக்கும் தாகம். அந்த மனிதர் அவர்களுக்கும் தண்ணீர் கொடுத்தார். திரும்ப ஆற்றுக்கு நடந்தார். வரும்போது மறுபடியும் ஐந்தாறு பேர். அவர்களுக்கும் தண்ணீர் கொடுத்தார். திரும்ப ஆற்றுக்குப் போனார்.

இந்த முறை, அந்தத் துறவியே அவரைத் தேடி வந்திருந்தார். “இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?” என்று கடிந்துகொண்டார். அந்த மனிதர் நடந்ததைச் சொன்னார்.

உன் மனைவியும் குழந்தைகளும் தாகத்தில் தவித்துக் கொண்டிருக்கும்போது, மற்றவர்களுக்கு உதவுவது தவறு. நீ நான் சொன்னது போல செய்திருக்க வேண்டும்.” எப்படி? நான் என்னிடமிருந்த தண்ணீரைக் கொடுக்காமல், உனக்கு ஆறு இருக்கும் வழியைக் காட்டினேன். அதுபோல் நீயும் வழிகாட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் தாகத்தில் தவித்தவர்களுக்கு உதவியதாகவும் இருக்கும். உன் குடும்பத்தினரின் தாகமும் அடங்கியிருக்கும்.” ஒருவருக்கு உதவுவது மட்டுமல்ல. அவருக்குத் தேவையானது கிடைக்க வழிகாட்டுவதுகூட உதவிதான் என்பது அந்த மனிதருக்குப் புரிந்தது.

துறவியோடு சேர்ந்து, குடிலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

# ஆச்சி அறிவுரை



## தோட்டக் காணிகள் எல்லாம் கடைக் கட்டடத்தால் நிறைகிறது பேராண்டி...

இப்ப எங்கட ஆக்களிட்ட கடை கட்டுற கலாசாரம் மேலோங்கிட்டுது கவனிச்சியோ?

ஓம், பிரதான வீதிக்கருகில காணி இருந்தால் அதிலை கடை கட்டவேணும் எண்டுறது தேச வழமைச் சட்டத்திலை இணைச்ச மாதிரியெல்லோ எங்கடயாக்கள் நிக்கினம். அதிலும் தோட்டக் காணிகளை பிடிச்சு அதில கடை கட்டுறதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

தோட்டமாவது மண்ணாங்கட்டியாவது எண்டு, வெளிநாட்டுக் காசு விளையாட, மரக்கறி விளைஞ்ச தரையில கொங்கிறீட் நிறையுது. தென்னை மரம் நிண்டு தேங்காய் காய்த்துக் குலுங்கின இடத்தில கொங்கிறீட் மரம் முளைச்சு நிக்குது. இதுதானாம் அபிவிருத்தி எண்டினம். உண்மையில இவைக்குப் புத்தி இருக்கோ? இல்லையோ? எண்டு அவையின்ர மண்டையைப் பரிசோதித்துப் பார்த்தால்தான் தெரியும்.

**பேராண்டி!** நாங்கள் சின்னப்பிள்ளைகளா இருக்கேக்குள்ள எங்கட பின்னேரப் பொழுதுபோக்கு தோட்ட வெளிக்குப் போய் காய்கறி பிடுங்கி வாறதுதான்.

அப்பெல்லாம் இயற்கை முறையிலதான் தோட்டம் செய்வினம். தோட்ட வெளிக்குக் கிட்டப் போகவே அந்தக் காத்தில காய்கறி, பழங்களின்ர வாசம் வரும். அது ஒரு இனம்புரியாத இன்பத்தைத் தரும். கே.கே.எஸ் வீதியிலை முக்கால்வாசி தோட்டக் காணிகள்தான். கொஞ்சம் கொஞ்சமா தோட்டங்கள் அழிக்கப்பட்டு கட்டடங்கள் எழும்பிட்டுது.

ஆனாலும் மருதனார்மடம் சந்தியில இருந்து இணுவில் அண்ணா கோப்பி கட்டடம் வரைக்கும் கனகாலமா தோட்ட வெளியாய்த்தான் இருந்துச்சுது. இப்ப அதுக்கும் ஈனம் வந்திட்டுது. இப்ப அந்த தோட்டக் காணிகளும் கடை கட்டும் மரபுக்குள்ள வந்திட்டுது. இப்பிடி எத்தினையோ தோட்ட வெளிகள் அழிக்கப்பட்டு கடை, வீடு கட்டிட்டினம்.

ஏன் தோட்டமழிச்சு கடை கட்டுறியள் எண்டு கேட்டால், தங்கட பிள்ளைகள் உழைக்காமல் இருந்து அந்தக் கடை வாடகையில வாழ்க்கை நடத்துவினமாம்.

அட நாசம்; பிள்ளைகளுக்கு உழைப்பைக் கற்றுக்கொடுக்காமல் இப்பிடி சோம்பேறித் தனத்தைக் காட்டுற நீங்களெல்லாம் திருந்த இடமேயில்லை.

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும்

## உப்புத் தண்ணீரில் வாய் கொப்பளிக்கலாமா?







கல் உப்பு சமையலுக்கு மட்டுமல்ல, கிருமிநாசினியாகவும் செயற்படும். அதனால்தான், தொண்டையில் கிருமித்தொற்று ஏற்பட்டால் வெந்நீரில் கல் உப்புப் போட்டு கொப்பளிக்கிறோம்.

"நமது உடலில் பொதுவாக நோய் ஏற்படுத்தக்கூடிய பக்றீரியா (Bacteria), வைரஸ் (Virus) போன்ற நுண்ணுயிர்களை முற்றிலும் அழிக்கும் ஆற்றல் கல் உப்பிற்கு உண்டு. சமீபத்திய ஆய்வுகள் வெந்நீரில் கல் உப்புப் போட்டு வாய் கொப்பளித்தால், வாய் மற்றும் தொண்டையில் உள்ள கிருமிகள் நீங்குகின்றன என்று தெரிவித்திருக்கின்றன.

இந்தக் கொப்பளித்தல் முறைக்கு தூள் உப்பை பயன்படுத்தக்கூடாது. கல் உப்பை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த உப்பில் மட்டுமே பல வகையான நுண்ணூட்டச்சத்துக்கள் இருக்கின்றன.

எலும்புகள் வலுவாக இருக்க, மூளை ஆற்றல் மேம்பட இந்தச் சத்துக்கள் தேவை. வாய் கொப்பளித்தல் எப்படி செய்ய வேண்டுமென்றால், வாயில் வைத்தால் "ஆ" என்று சொல்லக்கூடிய அளவில் வெந்நீர் சூடாக இருக்கக்கூடாது. சூடு பொறுக்கும் தன்மை ஒருவருக்கொருவர் மாறுபடும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

தினசரி வாய் கொப்பளிப்பவர்கள் 200 மில்லி வெந்நீரில் ஒரு சிட்டிகை கல் உப்புப் போட்டு பயன்படுத்தினாலே போதும். வாயில் துர்நாற்றம், தொண்டையில் தொற்று, பற்களிடையே இரத்தக்கசிவு இருந்தால் 200 மில்லி வெந்நீரில் அரைக்கரண்டி கல் உப்புப் போட்டு வாய் கொப்பளிக்க வேண்டும். உப்பின் அளவு கூடினால் வாயினுள்ளே இருக்கும் பிஹெச் அளவில் மாற்றம் ஏற்பட்டு, செரிமானத்தில் பிரச்சினை வரும், கவனம்"



# பரிகாரம் தேவைப்படும் கனவுகள்



கனவில் தோன்றும் ஜீவராசிகளைக் கண்டால் சஞ்சலம் தேவை இல்லை. அவை நம்மை விரட்டாமல் இருந்தால், அந்தக் கனவை நல்ல கனவாகவே எடுத்துக்கொள்ளலாம். அந்த ஜீவராசிகள் உணவு கேட்டு வந்தால், நிச்சயமாக அது நல்ல சகுனம்தான்!

அதே ஜீவராசிகள் ஆக்ரோஷமான முறையில் நம்மை விரட்டுவது போல அல்லது நம்மைப் பாதிப்பது போல கனவுகள் வந்தால், நிச்சயம் ஏதோ ஒரு விரயம் வரப்போகிறது எனப் புரிந்து கொள்ளலாம். தினமும் காகம், பசு அல்லது நாய்க்கு உணவிடுவது சிறப்பு.

பாம்புகள் கனவில் தோன்றி நம்மை விரட்டுவது போலவும் கடிப்பது போலவும் கனவு வந்தால் நிச்சயம் சனியினுடைய பாதிப்பு ஜாதகத்தில் உண்டு. அதுவும் அந்த நாகம் கறுத்த நிறம் கொண்டிருந்தால், நிச்சயம் சனிக்கான ப்ரீதி செய்வது மிக நல்லது. அதே போல் காகம், கறுத்த உருவம், கறுத்த நிறப்பொருள், கறுத்த நிற உடை இவை போன்ற விடயங்கள் கனவில் வந்தால், அதுவும் சனியின் பாதிப்பே.

மாற்றுத்திறனாளிகள் கனவில் வந்து அழுவதுபோல் காட்சி வந்தால், சனி உங்களுக்கு யோகத்தை தரப்போகிறார் என்று அர்த்தம். அவர்கள் கனவில் தோன்றி விகாரமாக சிரித்தாலோ அல்லது மெதுவாகப் புன்னகைத்தாலோ நிச்சயம் மிகப்பெரிய விரயம் அல்லது மனக்கஷ்டம் ஏற்படலாம். இங்ஙனம் சனிக் கிரகப் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டும் கனவுகளைக் கண்டால், சனிக்கிழமைகளில் சனீஸ்வரர் வழிபாடு செய்ய வேண்டும். அன்று நல்லெண்ணெய் தீபம் ஏற்றி சனி பகவானை வணங்குவது அவசியம். அதேபோல் காகத்துக்கு அன்னம் இடுவதும் சிறந்த பரிகாரமாகும்.

கனவில் முன்னோர்கள் வருவது அல்லது குலதெய்வம் தோன்றுவது நமக்கு வாழ்வில் ஏற்றத்தைத் தரக்கூடிய கனவாகும். அவர்கள் விகாரமாக சிரிப்பது அல்லது புன்னகை தருவது நல்லதல்ல.



அவர்கள் அழுதால், அந்தக் கனவு நமக்கு ஒரு சுப விரயத்தைக் குறிக்கும், எனவே, சில கனவின் அர்த்தங்களை எதிர்மறையாகப் பார்த்து பலன்களை அறிய வேண்டும்.

# மண் பானை கோழி பிரியாணி





## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:



- கோழி – ஒரு கிலோ
- பாஸ்மதி அரிசி – முக்கால் கிலோ
- வெங்காயம் – ஒன்று
- இஞ்சி, பூண்டு விழுது – ஒரு கரண்டி
- தயிர் – கால் கப்
- மிளகாய்த்தூள் – 2 கரண்டி
- மல்லித்தூள் – 4 கரண்டி
- மஞ்சள்தூள் – முக்கால் கரண்டி
- நெய் – 2 மேசைக்கரண்டி
- தேங்காய் எண்ணெய் – 2 கரண்டி
- எலுமிச்சைச்சாறு – ஒரு கரண்டி
- பட்டை – 2 துண்டு
- கிராம்பு – 4
- ஏலக்காய் – 5
- அன்னாசிப்பூ – 4
- பிரியாணி இலை – 4
- மைதா – 2 கப்
- உப்பு – 2 கரண்டி

### செய்முறை

ஒரு வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வாய் அகன்ற பாத்திரத்தில் கோழி துண்டுகள், முக்கால் பகுதி வெங்காயம், மஞ்சள்தூள், மல்லித்தூள், மிளகாய்த்தூள், தயிர், இஞ்சி, பூண்டு விழுது, எலுமிச்சைச்சாறு மற்றும் உப்பு சேர்த்துக்கொள்ளவும். அனைத்தையும் நன்கு கலந்து, 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை ஊறவிடவும். மைதா மாவைத் தண்ணீர் சேர்த்து, சிறிது பிசுபிசுப்பான பதத்துக்குப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். அடிகனமான பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, பாதி அளவு பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை, அன்னாசிப்பூ சேர்த்துக் கொதிக்கவிடவும். தண்ணீர் கொதித்ததும், பாஸ்மதி அரிசியைச் சேர்த்து முக்கால் பதம் வேகவிடவும். வெந்தவுடன் தண்ணீரை வடித்து, பின் ஒரு தட்டில் போட்டு உலரவிடவும். ஒரு மண்பானையைச் சூடாக்கி, நெய், எண்ணெய் சேர்த்து காயவிட்டு, மீதியுள்ள பிரியாணி இலை, பட்டை, கிராம்பு, அன்னாசிப்பூ, ஏலக்காய் சேர்க்கவும். பிறகு ஊறவைத்த கோழி மசாலாவையும் சேர்த்துக் கொள்ளவும். சிறிதளவு தண்ணீர் தெளித்து, வேக வைத்து உலரவிட்ட பாஸ்மதி அரிசியைச் சேர்த்துக்கொள்ளவும். ஒரு கரண்டி நெய் சேர்க்கவும். பிசைந்த மைதா மாவை நீளமாகத் திரட்டி பானையின் வாய்ப் பகுதியில் ஒட்டவும். பிறகு மூடியை மேலே வைத்து அழுத்தி மூடவும். மிதமான தீயில் 20 நிமிடங்கள் வேகவிடவும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி 10 நிமிடங்கள் ஆவி அடங்கவிடவும். ஒட்டிய மாவை வெட்டி மூடியைத் திறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசக்கார பெற்றோர்; மனிதர்களின் முகங்களை சிதைக்கும்... இது கரடிகளின் கதை



காடுகள் துண்டாடப்பட்டு விட்டதால், மனித - விலங்கு எதிர்கொள்ளல்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. யானை, புலி, சிறுத்தைகளைப் போலவே குடியிருப்புப் பகுதிகளுக்குள் கரடிகளின் வருகையும் அதிகரித்திருக்கிறது.

“மனித - விலங்கு எதிர்கொள்ளலில் கரடிகளால் மனிதர்களுக்கு நிகழும் கொடூரங்கள், மனிதர்களால் கரடிக்கு நிகழும் கொடுமைகள் இரண்டுமே பதைபதைக்க வைத்துவிடும்.

கரடிகள் அடர்ந்த வனப்பகுதிகளில் வசிப்பவை. அவை மனிதர்களுடைய கண்களுக்குத் தென்படாது. மனிதர்களின் பெருக்கம் காரணமாக காடுகள் நகரமயமாகி வருவதால், மனித - கரடி எதிர்கொள்ளல் பரவலாக நடைபெற ஆரம்பித்துவிட்டன. கரடிகள் கூச்ச சுபாவிகள், நாம் அவற்றை தாக்கிவிடுவோம் என்கிற அச்சத்திலோ அல்லது பாதுகாப்பு நிமித்தம் நாம் அவற்றைத் தாக்க முற்படும்போதோ தான் கரடிகள் நம்மைத் தாக்கும்.

கரடிகளால் காயமடைந்தவர்களின் நிலையைக் கண்கொண்டு பார்க்கமுடியாது. கரடியின் கால் நகங்கள் கூர்மையாக இருப்பதால், மனிதர்களின் தலைமீது காலைத் தூக்கிப்போட்டு லேசாக இழுத்தாலே முகம் சிதைந்துவிடும்.

கரடிகளால் தாக்கப்பட்டவர்கள் பலரும் முகம் முழுக்க சேதமடைந்துவிட்டதால் ஒரு கண்ணையோ அல்லது இரண்டு கண்களையுமோ இழந்திருப்பார்கள். புலி, சிறுத்தை போல கரடிகள் பெரும்பாலும் உயிராபத்து ஏற்படுத்தவில்லையென்றாலும், பாதிக்கப்பட்டவர்களை பாதி உயிராக்கிவிடுகின்றன என்பதே உண்மை.

உலகளவில், கரடிக்கால் சூப்பும், அதன் கறியும் பக்கவாத நோய்க்கும் ஆண்மைக் குறைவிற்கும் முக்கிய மருந்தாக இருப்பதாக சீனா, ஜப்பான், வியட்நாம், தாய்லாந்து போன்ற சில நாட்டினர் நம்புவதால், இந்த வகையிலும் கரடிகள் மனிதர்களுக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன”

“கரடிகள் தாம் காடுகளுக்கு மிக மிக முக்கியம். அவைதாம் விதைப் பரப்பல் என்னும் முக்கியமான வேலையை காடுகளுக்குள் செய்து கொண்டிருக்கின்றன.

காற்று வழி விதைகளைப் பரப்புகிற சில மரங்களைத் தவிர்த்து, மற்ற மரங்கள் தங்களுடைய விதைப் பரவலுக்கு காடுகளில் இருக்கிற பறவைகளையும் விலங்குகளையுமே சார்ந்திருக்கிறது. குறிப்பாகக் கரடிகளை, கரடிகள் அனைத்துண்ணி. பழங்களையும் விரும்பி உண்ணும். கரையான் புற்றையும் ஒரு கை பார்க்கும்.

உயரமான மரங்களில் ஏறுவதற்கும், கரையான் புற்றைக் கீறி சாப்பிடுவதற்கும் ஏற்றபடி அதன் நகங்கள் மிக மிகக் கூர்மையாக இருக்கும். இப்படி பழங்களையும் கரையான்களையும் சாப்பிட்டுவிட்டு, கரடிகள் போடும் எச்சத்தில் புதிய புதிய மரங்கள் உருவாகி, காடுகள் அடர்ந்த காடுகளாகும்.

கரடிகள் தேன் விரும்பிகள். தேனீக்களின் கூட்டைக் கலைத்து, அவற்றிடம் உடல் முழுக்க கொட்டு வாங்கினாலும் அதன் உடலின் மேலிருக்கிற கனமான மயிர்ப் போர்வை கரடியைக் காப்பாற்றி விடும்.

குட்டிகள் விடயத்தில் பாசக்கார பெற்றோர்கள் கரடிகள். குட்டிகள் வளரும்வரை தாயும் தந்தையும் அவற்றைத் தோள்களிலேயே சுமந்துகொண்டு “பழங்குடிகள் காடுகளுக்குள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருவதால், விலங்குகளின் காலடிச்சுவடுகள், அதன் எச்சம், சிறுநீர் போன்றவற்றின் மூலம் அவற்றின் நடமாட்டத்தை அறிந்து, அவற்றை எதிர்கொள்ளாமல் தவிர்த்து விடுவார்கள்.

ஒரு விலங்கின் வாசனையை நுட்பமாக அறிந்தவர்கள் அவர்கள். ஆனால், சமவெளிப் பகுதியில் வாழ்ந்த மனிதர்களுக்கு விலங்குகள் குறித்த இந்த நுட்பங்கள் ஏதும்தெரியாததால், மனித விலங்கு எதிர்கொள்ளல் சுலபமாக நிகழ்ந்து விடுகிறது.

# தெளிவே என் சிந்தனையுள்... 35

ஓர் இளைஞன் கால் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து விட்டான். அவனுக்கு நீச்சல் தெரியாது. அவன் தண்ணீரில் தத்தளித்தபடி “என்னைக் காப்பாற்றுங்கள்” என அவலக் குரல் எழுப்பினான்.

அவனின் அவலக்குரல் கேட்டு அயலில் உள்ளவர்கள் ஓடி வந்தனர். வந்தவர்கள் அவனைக் காப்பாற்றுவதற்காக கயிற்றை எடுத்துத் தண்ணீரில் தத்தளிக்கும் அவனிடம் கொடுக்க முற்பட்டனர்.

ஆனால் அவ்விடத்தில் நின்ற துறவி ஒருவர் அவனிடம் கயிற்றை வழங்காதீர்கள் எனக் கண்டிப்பாகச் சொல்லிவிட அனைவரும் அமைதியாகினர்.

கொஞ்ச நேரத்தில் அவனின் அவலக்குரல் அடங்கிப் போனது. வெளியே நின்றவர்கள் அவனின் உயிருக்கு ஏதோ நடந்து விட்டது என்றும் அவனின் மரணத்திற்கு அந்தத் துறவியே காரணம் என்றும் பேசிக் கொண்டனர்.

என்ன அதிசயம் சிறிது நேரத்தில் கிணற்றின் படிக்கட்டு வழியே அந்த இளைஞன் ஏறி மேலே வந்தான்.

அங்கு நின்றவர்களுக்கு அதிசயமாய் இருந்தது. எப்படி நீ உயிர்பிழைத்தாய்? என்று கேட்டனர்.

ஓ..... அதுவா? எனக்கு நீச்சல் தெரியாது என்ற பதற்றத்தில் நான் இறந்துவிடப் போகிறேன் என்று அலறினேன்.

ஆனால் இந்தக் கிணற்றில் என் நெஞ்சளவு தண்ணீரே இருந்தது. சற்று நேரத்தின் பின்னரே நான் அதை உணர்ந்து கொண்டேன்.

பதற்றத்தில் முடிவெடுக்கும் திறனை எனக்குத் தந்த சுவாமிகளுக்கு நன்றி என்று கூறிப் புறப்பட்டான் அந்த இளைஞன்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: அவள் ஒரு தொடர்கதை
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியவர்:கே.ஜே. ஜேசுதாஸ்



தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
இந்த ஊரென்ன சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? ஆ..
நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? – இல்லை
என் பிள்ளை எனைக் கேட்டுப் பிறந்தானா?
தெய்வம் செய்த பாபம் இது போடி தங்கச்சி
கொன்றால் பாபம் தின்றால் போச்சு
இதுதான் என் கட்சி
ஆதி வீடு அந்தம் காடு இதில்
நான் என்ன அடியே நீ என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

வெறும் கோவில் இதிலென்ன அபிஷேகம் உன்
மனமெங்கும் தெருக்கூத்து பகல் வேஷம்
கள்ளிக்கென்ன முள்ளில் வேலி போடி தங்கச்சி
காட்டுக்கேது தோட்டக்காரன் இதுதான் என் கட்சி
கொண்டதென்ன கொடுப்பதென்ன – இதில்
தாயென்ன மணந்த தாரம் என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதையென்ன?

தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம் – அது
தெரியாமல் போனாலே வேதாந்தம்
மண்ணைத் தோண்டித் தண்ணீர்
தேடும் அன்புத் தங்கச்சி
என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்
இதுதான் என் கட்சி
உண்மை என்ன பொய்மை என்ன இதில்
தேனென்ன கடிக்கும் தேளென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு

# விக்கிப் பீடியாவை விழுங்கும் ஏ.ஐ.

உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களால், இலாப நோக்கமின்றிக் கட்டமைக்கப்பட்ட ஒரு மாபெரும் இலவச அறிவுப் பெட்டகம்தான் "விக்கிப்பீடியா" (Wikipedia). கலைக் களஞ்சியமாக மட்டுமல்லாமல் ஒரு இயக்கமாகவே செயற்பட்டுவரும் விக்கிப்பீடியா, எந்தவொரு தலைப்பைப் பற்றி அறிய விரும்பினாலும், பயனர்களின் முதல் தேர்வாகவும் இருக்கிறது. இவை எல்லாம் AI எனும் அசுரன் வருவதற்கு முந்தைய நிலை. எல்லாவற்றிலும் கால் வைக்கும் ஏ.ஐ., விக்கிப்பீடியாவையும் விட்டு வைக்கவில்லை.

சமீபத்திய புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியைத் தந்துள்ளது. அதாவது, விக்கிப்பீடியா பயனர்களின் (Human users) பக்கப் பார்வைகள் (Page views) எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதாம்! செயற்கை நுண்ணறிவு பாட்கள் (AI Bots) தான் இதற்குக் காரணம் என்று விக்கிப்பீடியா குற்றம் சாட்டுகிறது.

இன்று நாம் வியந்து பார்க்கும் ChatGPT, Google Gemini, Claude, Perplexity போன்ற மாபெரும் மொழிமாதிரிகள் (LLMs) செயற்பட, எண்ணிலடங்காத தரவுகள் தேவை. இணையத்தில் உள்ள கோடிக் கணக்கான பக்கங்களைப் படித்து, உள்வாங்கி, அதன் மூலமே நம்மோடு உரையாடவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் கற்றுக்கொள்கின்றன.

மேலே சொன்ன இந்த AI மாடல்களுக்கு, விக்கிப்பீடியாதான் ஒரு தகவல் சுரங்கம். ஏனென்றால், விக்கிப்பீடியா கட்டுரைகள் தலைப்பு, துணைத் தலைப்பு, தகவல் பெட்டி என மிகவும் நேர்த்தியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில், இணையத்தின் மற்றைய பக்கங்களைவிட விக்கிப்பீடியாவில் உள்ள தகவல்கள் ஆதாரங்களுடன், சரிபார்க்கப்பட்டவையாக இருக்கின்றன. நூற்றுக்கணக்கான மொழிகளில் தகவல்கள் இருப்பதும் AI-களின் மொழிபெயர்ப்பு மற்றும் பன்மொழித் திறனுக்கு பெரிய அளவில் உதவுகிறது.

அசுர வளர்ச்சியடைந்துள்ள AI நிறுவனங்கள், மனிதர்கள் போல ஒவ்வொரு பக்கமாகச் சென்று விக்கிப்பீடியாவைப் படிப்பதில்லை. அதற்குப் பதிலாக "குட்டிச் சாத்தான்கள்" போல பிரத்தியேக "பாட்"களை (தானியங்கி நிரல்கள்) உருவாக்கியுள்ளார்கள். அவற்றை ஏவி விட்டு, விக்கிப்பீடியாவின் ஒட்டுமொத்த தரவுத்தளத்தையும் (Database) மொத்தமாகப் பதிவிறக்கம் செய்து தங்கள் கருவிக்குத் தீனி போட்டு, ஏப்பம் விட்டுக்கொள்கிறார்கள். இந்தத் தரவுத் திருட்டில்தான் விக்கிப்பீடியாவிற்கு சிக்கல் தொடங்குகிறது. முன்பு, ஒரு தகவலுக்காக மக்கள் நேரடியாக விக்கிப்பீடியா பக்கத்திற்கு வந்தனர். இப்போது, அவர்கள் கூகுள் தேடலிலோ அல்லது ChatGPT-யிடமோ ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். அந்த AI, சிட்டி ரோபோ போல் விக்கிப்பீடியாவில் இருந்து தான் கற்றுக்கொண்ட தகவலைத் தொகுத்து ஒரே வரியில் தந்துவிடுகிறது. இதனால், விக்கிப்பீடியாவிற்குச் செல்ல வேண்டிய அவசியம் பயனாளருக்கு இல்லாமல் போகிறது.

விக்கிப்பீடியா விளம்பரங்கள் மூலம் இயங்குவதில்லை. அது முழுக்க முழுக்க நன்கொடைகளையே நம்பியுள்ளது. அதைப் படிக்கும் பயனர்கள் எண்ணிக்கை குறையும் போது அந்தத் தளமே பலவீனமாகிறது. விக்கிப்பீடியாவின் உள்ளடக்கம் கிரியேட்டிவ் காமன்ஸ் (Creative Commons) உரிமத்தின் கீழ் உள்ளது. அதாவது, அதை யாரும் பயன்படுத்தலாம். ஆனால் அதற்கு முறையான அங்கீகாரத்தை (Attribution) வழங்க வேண்டும். பல AI நிறுவனங்கள், பில்லியன் கணக்கில் இலாபம் ஈட்டும் போது, தாங்கள் பயன்படுத்திய விக்கிப்பீடியா தரவுகளுக்கு உரிய அங்கீகாரத்தை, அல்லது ஒரு சிறிய நிதிப் பங்களிப்பைக்கூடச் செய்வதில்லை. சுருக்கமாகச் சொன்னால், AI நிறுவனங்கள் விக்கிப்பீடியாவின் இலவச உழைப்பை உறிஞ்சி, அதற்கு ஒரு போட்டியாளராக மாறி, அச்சுறுத்தலை உருவாக்கத் தொடங்கிவிட்டன.

'நியூயோர்க் டைம்ஸ்' போன்ற பெரிய செய்தி நிறுவனங்கள், தங்கள் உள்ளடக்கத்தை அனுமதியின்றிப் பயன்படுத்தியதாக AI நிறுவனங்கள் மீது வழக்குத் தொடுத்துள்ளன. கூகுள், மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்கள், விக்கிப்பீடியாவின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், தரவுகளைச் சரிபார்க்கவும் கோடிக்கணக்கில் நிதியுதவி வழங்கி, அதற்குப் பதிலாக அதன் தரவுகளைச் சட்டபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ள ஒப்பந்தங்கள் போட வேண்டும்.

மேலும் AI-யை ஒரு எதிரியாகப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, அதை ஒரு கருவியாக விக்கிப்பீடியாவும் பயன்படுத்தத் தொடங்கலாம். புதிய கட்டுரைகளை எழுதுவதற்கும், கட்டுரைகளில் உள்ள தகவல் பிழைகளைத் திருத்துவதற்கும், ஆதாரங்களைச் சரிபார்ப்பதற்கும் AI கருவிகளை விக்கிப்பீடியா வழங்கலாம். இது மனிதர்களின் வேலையை எளிதாக்கும்.

தகவல் தொழில்நுட்ப உலகில் நாம் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். AI யின் அபார வளர்ச்சி, இணையத்தின் அடிப்படைத் தூணான திறந்த மற்றும் இலவசத் தகவல் (Open and Free Information) என்ற கருத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது. விக்கிப்பீடியா போன்ற தளங்கள் அழிந்து விட்டால், AI கற்பதற்குப் புதிய, சரிபார்க்கப்பட்ட தகவல்கள் எங்கிருந்து கிடைக்கும்? பழைய தகவல்களையே அது மீண்டும் மீண்டும் மறுசுழற்சி செய்யும்.

எனவே, எதிர்காலம் என்பது AI, விக்கிப்பீடியாவை அழிப்பதாக இருக்கக் கூடாது. மாறாக, AI நிறுவனங்கள் தாங்கள் சார்ந்திருக்கும் விக்கிப்பீடியா போன்ற இலவச அறிவுத் தளங்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இலவசம் என்பது சுரண்டலுக்கானது அல்ல என்பதைப் புரிந்துகொண்டால் மட்டுமே, இந்த டிஜிற்றல் சுடர் தொடர்ந்து ஒளிரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா



**சரத்குமாரின்** கைவசம் இப்போது பல படங்கள் இருக்கின்றன. சமீபத்தில் நடந்த பட விழா ஒன்றில். "அப்பா. தாத்தா கதாபாத்திரங்களில் வெறுமனே நடிக்காமல் அந்தக் கதையின் நாயகனாக இருக்க வேண்டும் என்று நினைப்பேன். அப்படித்தான் "காஞ்சனா", "போர் தொழில்" போன்ற படங்களில் நடித்தேன். சமீபத்தில் வெளியான "டியூட்" படத்திலும் நல்ல கதாபாத்திரம் கொடுத்திருந்தார்கள்" என்று தன் பாலிசியை நினைவூட்டியிருக்கிறார் சரத்குமார்.

## சொல்லவே இல்ல...





**விஜய் சேதுபதிக்கு** தெலுங்கில் மார்க்கெட்டை ஏற்படுத்திக் கொடுத்த "உப்பெனா" புச்சி பாபு இயக்கத்தில், ராம்சரண், ஜான்வி கபூர் நடித்துவரும் படம் "பெத்தி". ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துவரும் இந்தப் படத்தின் ஒரு பாடல் காட்சியை இலங்கையில் படமாக்கித் திரும்பியிருக்கிறார்கள். படத்தை ராம் சரணின் பிறந்தநாள் என்று திரைக்குக் கொண்டுவர முயற்சிகள் நடக்கின்றன.

### ஐஸ்வர்யா ராம்சாய்





"**ஆறு** வருடம் கடந்து மலையாள "மௌன ராகம்" போய்க்கொண்டிருக்கிறது. சீரியல் முடியப்போகுது என்று ஒரு வருடமாவே சொல்லிட்டிருக்கிறார்கள். அது நிஜமா என்று தெரியவில்லை.

**ஆ**னால் அந்த சீரியல் முடிந்தாலுமே என்னால் கேரளாவை விட்டு வரமுடியாது என்று நினைக்கிறேன். ஏன்னென்றால் அடுத்தடுத்த சீரியல்களுக்கு இங்கே கேட்டுட்டிருக்கிறார்கள். அதனால் கல்யாணம் பற்றியெல்லாம் இப்போதைக்கு யோசிக்க நேரமில்லை. அதை வீட்டில் பார்த்துக் கொள்வார்கள். அதற்கு இன்னும் நாள் இருக்கு என்று என் ஜாதகம் சொல்லுதாம்."



**மஞ்சு வாரியர்** ஆர்யாவுடன் நடிக்கும் "மிஸ்டர் எக்ஸ்", டிசம்பருக்குள் திரைக்கு வரும் வகையில் பணிகள் நடக்கின்றன. அடுத்து, பா.இரஞ்சித்தின் இயக்கத்தில் ஆர்யா நடித்திருக்கும் "வேட்டுவம்" படப்பிடிப்பும் நிறைவடையும் கட்டத்தில் இருக்கிறது. காமெடி ஜானரில் நடித்துப் பல ஆண்டுகள் ஆவதால், அடுத்து அப்படியொரு படத்தில் நடிக்க விரும்புகிறார், ஆர்யா. இன்னொரு பக்கம் "சார்பட்டா பரம்பரை 2" இற்கான தோற்றத்தைக் கொண்டுவரும் வேலைகளிலும் இறங்கியிருக்கிறார்.

**லிங்குசாமியின்** இயக்கத்தில் சூர்யா, சமந்தா நடித்து 2014 இல் "அஞ்சான்" படம் வெளிவந்து கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இப்போது அந்தப் படத்தை ரீ-எடிட் செய்து மறுபடியும் ரீரிலீஸ் செய்கிறார்கள். நவம்பர் 28ஆம் திகதி அஞ்சானின் புது வெர்ஷனை வெளியிட ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கின்றன. இந்த மாதிரி முழுக்க ரீ-எடிட் செய்து தமிழில் ரீரிலீஸ் ஆவது இது முதல் தடவை என்கிறார்கள். விமர்சனத்துக்கு அஞ்சான்!







**தனுஷின்** அக்கா மகன் பவிஷ், தனுஷ் இயக்கிய "நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்" படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமானார். அடுத்த படத்துக்கான கதைகளை பவிஷ் கேட்டுவந்த நிலையில், அறிமுக இயக்குநர் மகேஷ் ராஜேந்திரன் படத்தில் கமிட் ஆகியுள்ளார். சமீபத்தில் நடந்த இதன் பட பூஜையில் பங்கேற்ற கஸ்தூரி ராஜா, கிளாப் அடித்து படப்பிடிப்பைத் தொடங்கி வைத்திருக்கிறார். இன்னொரு விடயம், கஸ்தூரி ராஜா இப்போது நடிகராகபல படங்களில் நடித்து வருகிறார்.

## சின்னத்திரை டைரி

### ஸ்ருதி ராஜ்



**சுய அறிமுகம்**

ஊர் கேரளா. அப்பா மில்ற்ரி ஆபீசர். மலையாளத்தில் கொஞ்சம் நடித்துவிட்டு தமிழ்நாட்டுக்கு வந்தேன். இங்கே சில படங்களில் வந்து போனேன். சீரியல் ஏரியா நல்லா செட் ஆகிவிட்டதால் இப்போதைக்கு அதில் செட்டில் ஆகியிருக்கிறேன்.

**சினிமா?**

நான் எதிர்பார்த்த மாதிரியான கேரக்டர்கள் அமையவில்லை. அதற்காக ஃபீல் பண்ணியதும் இல்லை. நமக்கு என்ன கிடைக்கணும் என்று இருக்கோ அதுதான் கிடைக்கும்.

**ஸ்ட்ரிக்டா கடைப்பிடிப்பது**

ஃபங்க்சுவாலிட்டி. ஷூட்டிங் ஸ்பாட்டில் எல்லாம் என்னால் எதுவும் தாமதமாகக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பேன். இந்த ஒரு விடயம் மட்டுமல்ல. எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும் என்று நினைப்பேன். மில்ற்ரி ஆபீசரா இருந்த அப்பாதான் அப்படி வளர்த்தார்.

**ஸ்ட்ரெஸ் பஸ்டர்**

ரீல்ஸ். வேலை இல்லாமல் போவதில்லை. நடிக்கிற நேரம் தவிர மற்ற நேரங்களில் இதைச் செய்வோம் என்று ஜாலியாக செய்வதுதான்.

**பிடித்த விடயம்**

சமீபமாக. பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு சென்று வருவது பிடிக்குது.



**ஹிந்தியைத்** தொடர்ந்து தமிழிலும் மீண்டும் அதிக கவனம் செலுத்தி வருகிறார். மாதவன். "மித்ரன்" ஜவஹர் இயக்கத்தில் நடிக்கும் "அதிர்ஷ்டசாலி"யைத் தொடர்ந்து, இயக்குநர் ஏ.எல். விஜயின் இயக்கத்தில் கங்கனா ரணாவத்துடன் ஒரு படத்தில் நடித்துவருகிறார். சமீபத்தில், அதன் படப்பிடிப்பிற்காக ஊட்டி சென்று வந்தார், மாதவன். இதைத் தொடர்ந்து, ஜி.டி.நாயுடுவின் பயோபிக்கிலும் மும்முரமாக நடித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## நாய் வேணும்...






ஒருவர் காபி ஷாப் ஐ விட்டு வெளியே வரும்போது ஒரு வித்தியாசமான இறுதி ஊர்வலம் செல்வதை பார்த்தார். ஒரு சவப்பெட்டி முதலில் எடுத்துச் செல்கிறார்கள். அதை தொடர்ந்து மற்றொரு சவப்பெட்டி செல்கிறது.

அதற்கு பின்னால் ஒரு மனிதன் கறுப்பு நாயை பிடித்துக்கொண்டு நடந்து செல்கிறார்.

அவருக்குப் பின்னால் ஒரே வரிசையாக 200 ஆண்கள் நடந்து செல்கிறார்கள். இதைப் பார்த்த காபி ஷாப் மனிதருக்கு ஒரே ஆர்வம் அடக்கமுடியவில்லை. அவர் கறுப்பு நாயுடன் நடந்து கொண்டிருந் தவரிடம் சென்று என்னை மன்னிக்கவும், உங்களை Disturb செய்வதற்கு, ஆனால் இந்த மாதிரி ஒரு இறுதி ஊர்வலத்தை நான் என் வாழ்கையில் பார்த்ததே இல்லை.

எல்லோரும் ஒரே வரிசையில் உங்கள் பின்னால் வருகிறார்கள். இது யாருடைய இறுதி ஊர்வலம்? முதல் சவப்பெட்டி என் மனைவி உடையது. என்ன ஆயிற்று உங்கள் மனைவிக்கு???

என்னுடைய நாய் அவளைக் கடித்து கொன்றுவிட்டது. இரண்டா வது சவப்பெட்டி? என்னுடைய மாமியாருடையது! அவர் என் மனைவியை காப்பாற்ற முயன்றபோது அவரையும் கொன்று விட்டது. ஒரு நிமிட மௌனத்திற்கு பிறகு முதல் மனிதர் அவரி டம் கேட்டார்.

"இந்த நாயை எனக்கு சிறிது நாட்கள் தரமுடியுமா?" அதற்கு அவர் சொன்ன பதில்...!

பின்னால் வரும் வரிசையில் போய் நில்லுங்கள்!

## நல்ல சாரதி!



அமெரிக்க நகர் ஒன்றில், சர்தார் ஒருவர் காரில் தன் மனைவி, அம்மா எல்லோருடனும் சென்று கொண்டிருந்தார். நீண்ட நேரமாக அவரை ஒரு பொலிஸ் ஜீப் தொடர்ந்து கொண்டிருந்தது. சர் தாரும் அதை கவனித்துக் கொண்டு தொடர்ந்து வண்டியை ஓட்டிக்கொண் டிருந்தார்.

சிறிது நேரத்திற்கு பிறகு பொலிஸ் ஜீப் சர்தார் காரை முந்திக்கொண்டு சென்று அவர் கார் முன் நின்றது. இறங்கி வந்த பொலிஸ் சர்தாரிடம் குட் ஈவ்னிங் சார். சர்தார் குட் ஈவ்னிங், ஏதாவது பிரச்சினையா? பொலிஸ், "நாங்கள் இருவரும் உங்கள் காரை அரை மணி நேரமாக கவனித்து வருகிறோம்." ஆனால் நீங்கள் போக்குவரத்து விதிகளை மீறாமல் ஸ்பீட் லிமிட்டை ஒரு மைல் கூட அதிகரிக்காமல், சக சாரதிகளை மதித்து காரை ஓட்டிய விதத்தை நாங்கள் பாராட்டுகின்றோம்.

அதனால், சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, உங்களை சிறந்த சாரதியாக தேர்வு செய்து, 10,000 டொலருக்கான இந்த செக்கை அன்ப ளிப்பாக கொடுக்கிறோம் பெற்றுக்கொள்ளுங்கள்.

சர்தார் ஒரு சந்தோஷமாக ஒரு பெருமூச்சுவிட்டு விட்டுச் சொன்னார். "இந்த பணத்தை வைத்து எப்படியாவது "டிரைவிங் லைசன்ஸ்" கட்டாயம் எடுத்துவிட வேண்டும்" என்று சொன்னார். பொலிஸ் ஒருமாதிரி பார்க்க,

உடனே சர்தாரின் மனைவி சாரி சார் தவறாக நினைக்க வேண்டாம். அவர் குடித்துவிட்டு உளறுகிறார் என்றார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சர்தாரின் காது கேட்காத அம்மா சொன்னார். நான் அப்பவே சொன்னேன் கேட்டியா, திருட்டுக் காரை எடுத்துக்கொண்டு வந்ததால், இப்போது எல்லோரும் பொலிஸில் மாட்டிக் கொண்டோம்.

## தருவை வளர்



தருவிற்கு உற்சாகம்
தண்ணீரின் ஊடே
தரணிக்கு உற்சாகம்
நல் தருக்களின் ஊடே
தருவளர்க்காமல் எங்கும்
பொழிந்ததில்லை மழையும்
அதனை நேசிக்காமல் போனால்
தரணிக்கே பெரு அழிவும்
தருவை நீ நெல்மணி போல் விதை
தரு உன்னைக் கண்மணி போல்
காக்கும் தரு தந்திடுமே வண்மை
அதனாலேயே மனத் தண்மை
தரு சொல்லிடுமே அறம்
அதுதான் நம் வாழ்வின் மறம்
தருவை வளர்க்க நீ தக்க வழி காண்
தரு உன்னை வளர்க்க தக்க
வழி காணும்

**லக்ஸ்மன்.யுஸிற்றா, மாணவி,**
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**

## அழகே தமிழே!




தமிழ் வாழ்க...

காகிதம் எடுத்து நீலவண்ண எழுதுகோல் பிடித்து
எண்ணுகின்றேன் என் அன்னை பற்றி
என் எண்ணம் எல்லாம் என் அன்னை அழகுத் தமிழை
என்னவென்று சொல்ல அவள் அழகை
எப்படி எழுத அவள் திறனை
ஒரு சொல்லுக்கு பல பொருள் தரும் சிலேடையாய்
எதுகையாய், மோனையாய், அடுக்குத்தொடராய்,
அடுக்கிடுக்குத் தொடராய்
இணைப்பிடையாய் வேற்றுமையாய்
இலக்கணமாய் இலக்கியமாய் என் இதயத்தில் ஊஞ்சலாடும்
என் அழகே என் அன்னை தமிழ்
சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி,
குண்டலகேசி என ஐம்பெருங்காப்பியங்களையும்
தன்பால் இழுத்து தன் தொன்மையையும், பெருமையையும்
அழியாது நிலை நிறுத்தி அழகாக காக்கிறாள்
என் அன்னை அழகுத் தமிழ்
நூலிலே தலை சிறந்த நூலென்றொல் திருக்குறள்
திருக்குறளின் அன்னைமொழி எதுவென்றால் தமிழ்மொழி
என் பாட்டன் பாரதியின் இளமைக் காதலியாய்
இனிமையின் இளவரசியாய் அழகுக்கு அழகூட்டும்
அழகி இவளே என் அன்னைத் தமிழ்
ஏழேழு எழுத்தாளன் எழுதிய மொழி இது
பற்பல பாடகனால் பாடப்பட்ட மொழி இது
பெருபெரு கவிஞர்களால் கதைக்கப்பட்ட மொழி இது
பலபல சந்ததியை கடந்து வந்த மொழி இது
எத்தனை ஆண்டு சென்றாலும் மங்காத மொழி இது
எத்தனை மொழிகள் பிறந்தாலும்
என் வாழ்வு ஒரு மொழி அதுவே என் அழகுத் தமிழ் மொழி

**கேம்குமார் பரணிகா**
**பன்னை, கனகபுரம்,**
**கிளிநொச்சி**

## கவிதைக் கலசம்




**அன்பு வாசகர்களே!**

**உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...**

- ☑ கவிதை
- ☑ அரசியல்
- ☑ இலக்கியம்
- ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**E-mail** valampurii@yahoo.com
**Whatsapp** 076 097 3126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

76

**செங்கை ஆழியான்**

கோட்டையின் மூன்று பக்கங்களிலிருந்தும் வழமைக்கு மாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தப்பட்டமை, போராளிகளின் கவனத்தை மண்டைதீவுப் பக்கமிருந்து திசை திருப்புவதற்காகவே என்பதைக் கணத்தில் புலிகள் புரிந்து கொண்டனர்.

சிறுதீவிலிருந்து பல விசைப்படகுகள் இராணுவ வீரர்களை நிரப்பிக் கொண்டு கோட்டையை நோக்கி வேகமாகப் புறப்பட்டு வருவதைப் போராளிகள் அவதானித்துவிட்டனர். உடனடியாக எல்லா காவலரண்களுக்கும் தகவல் பரிமாறப்பட்டது. போராளிகளின் துப்பாக்கிகள் சுடல் பக்கமாக விரைந்து வரும் விசைப்படகுகளை நோக்கித் திரும்பி தாக்க தயாராகின.

படகுகள் புறப்பட்ட அதே நேரம் சிறுதீவுக் சுடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலிஸ் நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த காவலரணும், பண்ணைச் சந்திக காவலரணும் ஸ்ரீ லங்கா விமானப்படையினதும் கடற்படையினதும் பிரதான இலக்குகளாக இருந்தன.

கோட்டைக்குள்ளிருந்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இடைவெளியின்றிப் பீரங்கிக் குண்டுகளும், எறிகணைகளும் போராளிகளின் காவலரண்கள் மீது வீசப்பட்டன. நிமிடத்திற்கு ஆயிரம் துப்பாக்கி ரவைகள் சரமாரியாகப் பாய்ந்தன. போராளிகளின் சில காவலரண்கள் சரிந்தன.

போராளிகள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி சரிந்தனர். எனினும் போராளிகளின் மனவலிமை குன்றவில்லை. கடலேரியூடாகக் கோட்டையை நோக்கி விரைந்து வரும் விசைப் படகுகளை நோக்கிப் புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. துப்பாச்சிச் சன்னங்கள் பாயக் கூடிய எல்லைக்கு வந்ததும் ஒரே நேரத்தில் தம்மை நோக்கிச் சரம் தொடுத்த போராளிகளின் துப்பாக்கிச் சன்னங்கள் இராணுவத்தினரை நிலைகுலைய வைத்தன..

ஒப்பரேசன் போர்ட் இராணுவ நடவடிக்கையில் கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் கஜபாகு றெஜிமென்ட்டைச் சேர்ந்த 1, 4, 6 படைப் பிரிவினரும். சிங்கறெஜிமென்ட்டைச் சேர்ந்த 1 படைப்பிரிவினரும், கெமுனு படைப்பிரிவினரும் பங்கு கொண்டனர்.

மண்டைதீவிலிருந்தும் சிறுதீவிலிருந்தும் பரவைக் கடலைக் கடந்து கோட்டைக் கரையை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவர்களுக்கு விமான. கடற் படைகள் உதவின.

தொடரும்...

# புது வாழ்வு

பெரும் விளைவுகளை ஏற்படுத்தவல்ல இரவுக்குப் பூர்வாங்கமாக முளைத்த அந்த அமாவாசை தினத்தின் காலைப் பொழுதில் மாளிகையில் மாடிக்குச் சென்று அக்சய முனை கோட்டையையும் காட்டுப்பகுதியையும் கடற் பகுதியையும் கண்களால் அளவெடுத்த பலவர்மன் நகரத்துக்குள்ளே இருந்த அமைதியைக் கண்டு அசந்து போனான்.

அந்தக் காலை நேரத்தில் காட்டுப் பகுதிக்குள் ஆகாயத்தை நோக்கி எழுந்து சென்ற புகைமண்டலம் வில்வலனின் வீரர்கள் நகரத்துக்கு அதிக தூரத்தில் இல்லை என்பதைப் புலப்படுத்தியது.

கடற்பகுதியில் தரையில் பாதி இழுபட்டுக் கிடந்த கடற் புறாவைத் தவிர மருந்துக்குக் கூட மரக்கலமொன்று இல்லாததும், எந்த விநாடியிலும் சூளுக்கள் துறைமுகத்துக்குள் நுழைந்து விடலாமென்பதை நிரூபித்தது.

இந்த நிலையில் நகர மக்கள் ஏதும் நடக்காதது போல் தங்கள் தினசரி அலுவல்களைக் கவனித்து நடமாடிக் கொண்டிருந்தனர்.

நகரத்துக்குள்ளிருந்த நிலை, யாரும் எந்த நிகழ்ச்சியையும் சமீபத்தில் எதிர்பார்க்கவில்லையென்பதைக் கண்டு ஓரளவு மகிழ்ச்சி அடைந்தாலும், அந்த மகிழ்ச்சி மீண்டும் மீண்டும் மனதிலிருந்து அறுபட்டுப் போவதற்குக் காரணம் அறியாமல் தவித்தான்.

அத்தனைத் தவிப்பிலும் இருந்தது அவனுக்கு - தன்னை விட இளையபல்லவனைப் பெரிதாக மதித்து அவனிடம் தங்களை ஒப்படைத்துக்கொண்ட அக்ஷய முனைக் கோட்டை மக்களுக்கு அன்றிரவு தான் சரியான பாடம் கற்பிக்கப் போவதையும், மறுநாள் முதல் தன்னிடம் அக்ஷய முனை மீண்டும் அடிமைப்பட்டுக் கிடக்கப் போவதையும் நினைத்த பலவர்மன் உள்ளே எழுந்த திருப்திக்கு அறிகுறியாகச் சிறிது புன்முறுவலையும் தனது இதழ்களில் தவழவிட்டுக் கொண்டான். அப்படிப் புன்முறுவல் கொண்ட சமயத்தில், "கோட்டைத் தலைவர் காலையில் மகிழ்ச்சியுடனிருப்பது எனக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தனக்குப் பின்னாலிருந்து எழுந்த சொற்களைக் கேட்டுத் திகைத்துத் திரும்பிய பலவர்மன் தன்னை மிகவும் நெருங்கிய வண்ணம் இளைய பல்லவன் நிற்பதைக் கண்டதும் திகைப்பை மின்னல் வேகத்தில் மறைத்துக் கொண்டு ஆச்சரியச் சாயையை முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

"நீங்களும் காலையில் எழுந்து விட்டீர்களா?" என்று




# கடற்புறா

ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்கவும் செய்தான் பலவர்மன்.

"ஆம், எழுந்துவிட்டேன். நேற்று பூராவும் சரியான உறக்கமில்லை," என்று கூறிய இளையபல்லவன் பலவர்மன் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

உணர்ச்சிகளை லேசில் வெளிக்குக் காட்டாத பலவர்மன் முகத்தில் திகைப்பின் குறி வெளிப்படையாகத் தெரிந்தது."என்ன நேற்றிரவு உறக்கமில்லையா?" என்ற கேள்வி கவலையைக் காட்டும் முறையில் கேட்கப்பட்டாலும் உண்மையில் முகத்தில் தெரிந்த கிலி குரலிலும் பிரதிபலித்தது.

"ஆம். அடியோடு உறக்கமில்லை," என்றான் இளைய பல்லவன்.

"காரணம்?" கவலையுடனேயே எழுந்தது இந்தக் கேள்வியும்.

"வர வர ஊரில் அமைதி குறைந்து வருகிறது" என்று சுட்டிக்காட்டினான் இளைய பல்லவன்.

"அமைதி குறைந்து வருகிறதா?"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
470
வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஈரல் கொழுப்பு படிவு சுட்டிக்காட்டும் பேராபத்து நிலை...

எமது பிரதேசத்தில் பலர், Fatty Liver எனப்படும் ஈரலிலே கொழுப்பு படிந்த நிலையிலே அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அண்மைக் காலமாக, இது ஒரு பாரிய சுகாதார பிரச்சினையாக காணப்படுகிறது. இது சம்பந்தமாக பலர் விழிப்புணர்வு அல்லது அக்கறை இல்லாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டு வருகிறது. உலகளாவிய ரீதியில், Liver Cirrhosis எனப்படும் ஈரல் பழுதடைந்த நிலைக்கு இந்த ஈரல் கொழுப்பு படிவு முக்கியமான காரணியாக காணப்படுகிறது. அத்துடன் இந்நிலை, ஈரலிலே புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகிறது. முன்பு, ஈரல் புற்றுநோய் மற்றும் ஈரல் பழுதடைந்த நிலை ஏற்படுவதற்கு மதுபான பாவனை, Hepatitis B மற்றும் Hepatitis C எனப்படும் ஈரல் தொற்று நிலை என்பன காரணங்களாக இருந்தன. ஆனால், அண்மைக்காலமாக, ஈரல் கொழுப்பு படிவு முக்கியமான காரணியாக மாறியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவற்றிற்கு மேலதிகமாக, ஈரல் கொழுப்பு படிவு ஏற்பட்டவர்களுக்கு மாரடைப்பு, பாரிசவாதம் மற்றும் ஈரலிற்கு வெளியிலான புற்றுநோய்கள் என்பன ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, ஈரல் கொழுப்பு படிவினால் ஏற்படும் தாக்கம், ஈரலுடன் மட்டும் நின்று விடுவதில்லை உடலில் வேறு பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை உள்ளவர்களிலே, ஈரல் சம்பந்தமாக ஏற்படும் மரணங்களை விட, மாரடைப்பு, பாரிசவாதம் மற்றும் ஈரலிற்கு வெளியிலான புற்றுநோய்கள் என்பவற்றால் ஏற்படும் மரண வீதம் மிகவும் அதிகமாக இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. உங்களுக்கு ஈரலிலே கொழுப்பு படிவு நிலை காணப்படுமாயின், அது பின்வரும் விடயங்களை உணர்த்தி நிற்கின்றது. நீங்கள் செய்யும் உடற்பயிற்சி போதாது, உடல் நிறை பராமரிப்பில் நீங்கள் கவனமின்றி இருக்கிறீர்கள், உணவு முறைகளில் கவனமின்றி இருக்கிறீர்கள் என்பவற்றை கூறி நிற்கின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் உங்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்திரோல், பாரிசவாதம் என்பன ஏற்படும் அபாயம் அதிகமாக காணப்படுகின்றது என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. நீங்கள் அடிக்கடி மதுபான வகைகளைப் பாவிக்கிறீர்களா அல்லது சீனி அதிகம் சேர்க்கப்பட்ட பான வகைகளைப் பாவிக்கிறீர்களா என கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் கூறி நிற்கின்றது. நீங்கள் கவனமின்றி இருந்தால், உங்களுக்கு ஈரல், குடல் மற்றும் மார்பக புற்றுநோய்கள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.



தொடர்ந்து கவனயீனமாக இருந்தால், ஈரல் பழுதடைந்த நிலை ஏற்பட சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே ஒருவருக்கு ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை இருக்குமாயின், அவர் கவனக்குறைவாக இருக்க முடியாது. அதற்கு உடனடியாக, பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து, இந்த ஆபத்தான நிலையிலிருந்து வெளிவருவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில், 25% ஆனவர்களுக்கு இந்த ஈரலில் கொழுப்பு படிவு நிலை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால், எமது பகுதிகளில் இந்த விகிதாச்சாரம் அதிகளவில் காணப்படுகிறது. எமது பகுதிகளில் ஏறத்தாழ 35-40% ஆனவர்களுக்கு இந்த ஈரல் கொழுப்பு படிவு நிலை இருக்கலாம் என உய்த்தறியப்பட்டுள்ளது. இது திடீரென வளர்ந்தவர்களிலே ஏற்படும் ஒரு நிலை அல்ல. சிறுவயது முதலே காணப்படும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை காரணமாக, சிறிது சிறிதாக உருவாகும் ஒரு ஆபத்தான நிலையாகும். இந்த பாரிய சவாலை எதிர்கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி சிந்திக்க வேண்டி இருக்கிறது. முதலாவதாக, எமது சிறார்களை வளர்க்கும் போது, அவர்களை ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பழக்கப்படுத்த வேண்டும். ஒழுங்கான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு முறை என்பவற்றில் கவனம் எடுக்க வேண்டும். இவ்வாறு கவனம் எடுத்தால், எதிர்காலத்தில் அவர்களுக்கு ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை ஏற்படாது.

அதுமட்டுமல்லாது, இந்த நோய் ஏற்பட்டவர்கள் தமது உடல் நிறையை 5% குறைத்துக் கொண்டாலே, அவர்களுடைய ஈரலில் காணப்படும் கொழுப்பின் வீதம் குறைந்து வருவதாக ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தமது உடல் நிறையை 10% அல்லது அதற்கு மேலதிகமாக குறைப்பார்களானால், அதனால் பல அனுகூலங்கள் ஏற்படுவது ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அவர்களுடைய நிறையை 10% இற்கு மேலதிகமாக குறைப்பார்களானால், ஈரலின் கொழுப்பு வீதம் வெகுவாக குறைகிறது மற்றும் ஈர்லில் ஏற்படும் Fibrosis எனும் நிலை குணமடைந்து வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த குறைந்த நிறையை அவர்கள் அப்படியே பராமரித்து வருவார்களேயானால், அவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், புற்றுநோய் மற்றும் ஈரல் பழுது நிலை என்பன ஏற்படும் வீதம் குறைவடைவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக, Active lifestyle எனப்படும் சிறந்த வாழ்க்கை முறையைப் பேணுவது அவசியம். எமது வாழ்க்கை முறையில், உடற்பயிற்சி வீதத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என நாம் சிந்திக்க வேண்டும். எமது உணவு முறையில் நாம் ஏற்படுத்தும் சிறிய மாற்றங்கள் கூட, இந்த நிலையில் இருந்து நாம் மீள்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

உணவிலே மிக அதிகளவில் மரக்கறி வகைகள், இலை வகைகள், இனிப்புச் சுவை குறைந்த பழ வகைகள் என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பேரீச்சம்பழம் போன்ற இனிப்பு கூடிய உணவு வகைகளையும் மாப்பொருட்களையும், எண்ணெய் வகைகளையும் வெகுவாக குறைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். அத்துடன், இந்த நிலை உள்ளவர்கள் மதுபான வகைகள், பழரசங்கள் மற்றும் சீனி அதிகம் சேர்க்கப்பட்ட ஏனைய பான வகைகள் என்பவற்றை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன், இந்த ஈரலிலே கொழுப்பு படிந்த நிலை உள்ளவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்திரோல், Metabolic syndrome போன்ற நோய்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு அதிகமாக இருப்பதால், இந்நோய்கள் இருக்கிறதா என பரிசோதித்து பார்க்க வேண்டும். Fatty liver இற்கு மேலதிகமாக மேற்கூறிய நோய்கள் இருக்குமானால், அவற்றை பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். இவற்றை உணவு முறை, உடற்பயிற்சி அல்லது மருந்துகள் மூலமாக இந்நோய்களை பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் எமக்கு பல அனுகூலங்கள் ஏற்படும். இதன்மூலம் பல வேண்டத்தகாத விளைவுகளை நாம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

Fatty liver எனும் நிலைக்கு என்ன மருந்துகள் பயன்படுத்தலாம் என்பது பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வரை, இந்த நிலைக்கு பாவிக்கக் கூடிய எந்தவொரு வினை திறனான மருந்தும் அறிமுகப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்திலே, Combined Treatment எனப்படும் சில மருந்துகளின் இணைந்த பயன்பாடு, ஒரு பொருத்தமான மருத்துவ சிகிச்சை முறையாக அறிமுகப்படுத்தப்படலாம். எனவே, மருந்துகள் இல்லாமல், மேற்கூறிய ஆரோக்கியமான நடவடிக்கைகள் மூலம் இந்த நோய் நிலையில் இருந்து விடுபடுவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி.யோகராசா மயூரதி (ஆச்சி)



மண்ணில் –28.03.1980
விண்ணில் – 07.11.2025

வதிரி,கரவெட்டி தங்க மஹாலினை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராசா மயூரதி (ஆச்சி) அவர்கள் 07.11.2025 வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மதியாபரணம் - தங்கரத்தினம் தம்பதியினரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - யோகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் , யோகராசா(கண்ணன் -சாரதி, இலங்கை போக்குவரத்து சபை-பருத்தித்துறை சாலை)அவர்களின் அன்பு மனைவியும், திருமதி. சி.ரட்ணமதி(சுவிஸ்), மதியழகன்(செட்டி, மதி ட்ரவல்ஸ்), மயூரன்(மயூ ட்ரவல்ஸ்), கோபிநாத் (சுகாதாரபணி உதவியாளர், பிரதேச வைத்தியசாலை- அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவனேஸ்வரன் (சுவிஸ்), பிரதாயினி, சொரூபி, மாருதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சிவனுஜா, சஜிந்த் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், இலக்கியா, திவ்யா, டக்சிகா, கௌரிசனன், மகிஷா, தர்வின் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை (10.11.2025) பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

தகவல்- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு.
ம.மயூரன் (சகோதரன்) +9477 513 8177
ம.மதியழகன் (சகோதரன்) +9477 497 0708
ம.கோபிநாத்(சகோதரன்) +9477 912 4056

(C-4294)

# காசோலை வழங்கி வைப்பு

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை யின் கீழ் உள்ள சன சமூக நிலையங்களிற்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வானது தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரனால் 36 சன சமூக நிலையங்களிற்கு தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பிரதேச சபை செயலாளர் மற்றும் சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து . கொண்டிருந்தனர். (3-250)

# வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் வியாபார கடைக்கு (40 வயதிற்கு உட்பட்ட) ஆண் வேலையாள் தேவை. field work, சம்பளம் 40,000/- (Basic) சாரதி அனுமதி தேவை, முன்னனுபவம் தேவையில்லை.

**078 911 3766**

(5865)

# வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு பெண் மேற்பார்வையாளர்கள் தேவை கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். நகரை அண்டியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
**076 087 4030, 074 056 7791**

(C-4288)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(தருமபுரம்)

போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு தருமபுர மத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவினர் போதைப் பொருள் பாவனையில் ஏற்படக் கூடிய தீமைகள் தொலைபேசியினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு வழங்கப்பட்டது.

(8-316)

# வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Sales Assistant
2. Store Keeper
3. Accountant
4. Manager
5. Packaging (பொதியிடல்)
6. Driver

> வயது எல்லை 18 – 40
> யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :
**077 419 5209, 077 419 5218**

(5861)

# காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும்.ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

உரும்பிராய் **077 844 9861**

(5857)

# பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் உள்ள வீட்டில் இரு சிறுவர்களை பராமரிக்க பணிப்பெண் தேவை. தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
**076 209 9227**

(5846)

# தையல் வேலையாட்கள் தேவை

பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றிற்கு தையல் தெரிந்த பெண் வேலை ஆட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு
**076 605 2532**

(5833)

# விற்பனைக்கு

**Forklift Komatsu 2 ton (petrol)**
**வாகனம் விற்பனைக்குண்டு.**

தொடர்பு :
**076 097 3121**

# வேலைவாய்ப்பு

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடி தேவை.
வயது எல்லை 20-40 இற்கு உட்பட்ட ஆண்கள்.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

- ❖ மேற்பார்வையாளர் (Supervisor)
- ❖ இயந்திர இயக்குநர் (Machine Operator)
- ❖ களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
- ❖ சாரதி (Drivers)
- ❖ மூடை தூக்கும் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் (Laborers)

(174)

தொடர்புகளுக்கு
RG Brothers, No: 228, Canel Road,
Elakanda Hendala Wattala.
**077 434 6367**

# வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு உதவியாளர் தேவை.

பெண்கள் மட்டும்
சம்பளம் 100, 000/=
30 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 258 5564**

(5868)

இந்த அளவில்
விளம்பரம் பிரசுரிக்க
1250 ரூபா மட்டுமே

# இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**
... கண்டுக்குளி (முன்பதிவு செய்து வரவும்)

(C-4268)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சண்டிலிப்பாய் பிரதேச கலாசார அதிகாரசபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய கலை இலக்கிய விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் சீரணி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் முன்னெடுத்த ஆண்டு விழாவும் கல்விசார் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 31 ஆம் திகதி கோண்டாவிலில் உள்ள அலுவலகத்தின் செயலாற்றுகைப் பகுதி மண்டபத்தில் நடைபெற்றது.




வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு தினமும் கடந்த 4 ஆம் திகதி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது.

(படங்கள்-கஜிந்தன்)



அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாதைக்கான வளைவு பாராளுமன்ற உறுப்பினர் ஜெயசந்திரமூர்த்தி ரஜீவனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையில் நீண்ட காலமாக பாதையின் வளைவு இல்லாத காரணத்தினால் அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக பாடசாலையின் பழைய மாணவர்களால் குறித்த வளைவு அமைத்துக் கொடுக்கப்பட்டது.



உலக சித்தங்கேணி ஒன்றியத்தின் அனுசரணையில், சித்தங்கேணி ஆன்மீக அறக் கட்டளை நிதியம் நடத்திய வருடாந்த வாசிப்பு மாத போட்டியின் பரிசளிப்பு விழாவானது கடந்த 3 ஆம் திகதி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது.

(படம்- கஜிந்தன்)

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்துக்கு 42 ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இவர்களில் 36 பேர் சுதேச வைத்தியத்துறையின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளுக்கும் 6 பேர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் கீழும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமன நிலையங்களை வழங்கும் நிகழ்வு பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் நிறுவுனர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும், 115 ஆவது ஆண்டு விழாவும் அண்மையில் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை நீண்டதாய் இருப்பதை விட பெருமை மிக்கதாய் இருக்க வேண்டும். – *அம்பேத்கர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கண்கெட்ட பின்பு சூரியநமஸ்காரம்

தமிழில் இல்லாத பழமொழி எதுவுமில்லை என்று கூறுமளவுக்கு அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்த வல்ல பழமொழிகள் நம் தமிழ் மொழியில் உண்டு.

இருந்தும் நம்மவர்கள் பழமொழி குறித்து அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

ஆனால் தமிழ்ப் பழமொழிகள் மனித வாழ்வுக்கான தத்துவங்கள் – அறிவுரைகள் – பட்டறிவின் பொக்கிசங்கள். இருந்தும் வேரில் பழுத்த பலா போல அவை தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

உண்மையில் தமிழ் மொழி தரும் பழமொழிகளைப் படித்து அதைப் பின்பற்றினால், இந்த உலகில் எதைச் சாதிக்க விரும்புகின்றோமோ அதைச் சாதித்தாக முடியும்.

இது எங்கள் தமிழ்ப் பழமொழி பற்றிய சிறுகுறிப்பு மட்டுமே.

இஃது ஒருபுறமிருக்க, கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்ற பழமொழி கூறுகின்ற தத்துவத்தை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கு கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பது, இருக்கும் போது அதனைப் பின்பற்றாமல் – மதிக்காமல், இழந்த பின்பு அதை அமுலாக்க நினைப்பதை இப்பழமொழி குறித்து நிற்கிறது.

அதாவது, கண்பார்வை நல்லதாக இருக்கும்போது ஒரு நாள் பார்த்து சூரியநமஸ்காரம் செய்யவில்லை. கண்கண்ட தெய்வமாக இருக்கக்கூடிய சூரியனைக் கண்களால் கண்டு வணங்குவது எத்துணை சிறப்புக்குரியது.

எனினும் அதனைச் செய்யாமல், விட்டு விட்டு கண்பார்வையை இழந்த பின் சூரிய நமஸ்காரம் செய்வதென்பது எத்துணை மடமைத்தனம்.

ஆனாலும் கண்பார்வை இருக்கின்றபோது சூரியநமஸ்காரம் செய்யாதவர்கள் கண்கெட்ட பின்பு சூரியநமஸ்காரம் செய்ய முற்படுகின்றனர்.

இதைக் குறித்துரைக்கும் மேற்போந்த பழமொழியானது, இருக்கும்போது செய். இல்லாதபோது அதைச் செய்யலாம் என்று நினைக்காதே என்ற உண்மையை செப்பி நிற்கிறது.

ஆம், இன்றைய தமிழ் அரசியல் தரப்புகளின் நிலைமையை மேற்படி பழமொழி மிகத் துல்லியமாகச் சுட்டி நிற்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்படக்கூடிய வாய்ப்புகள் எவ்வளவோ இருந்தும் அதனை எவரும் திரும்பிப் பார்க்கவில்லை.

தமிழ் மக்கள் எங்களோடு நிற்பர். நாங்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள். எங்களை யாரும் அசைக்க முடியாது என்ற நினைப்பில் இருந்ததெல்லாம் இப்போது கவிழ்ந்து போயிற்று.

உண்மை. இனித் தமிழ் மக்களின் அரசியல் ஆர்வம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நோக்கி நகர்ந்து வருகிறது.

தமிழ் மக்கள் இப்படி மாறிவிட்டார்களா? என்று யாரேனும் கேட்கலாம். அவ்வாறு கேட்பார்களாயின், தமிழ் அரசியல் தரப்புகள் தமிழ் மக்களுக்குச் செய்த வஞ்சகத்தால் நம்மவர் அநுரவின் பக்கம் திரும்பியுள்ளனர் என்பதே உண்மை.

ஆக, இனி தமிழ்த் தரப்புகளை ஒற்றுமைப் படுத்துவதென்பது கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் போன்றது.

### இலங்கை கடற்படை கைது செய்த

## இந்திய மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி த.வெ.க உண்ணாவிரதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 35 இந்திய மீனவர்களையும் உடனடியாக விடுவிக்கக் கோரி, தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க) நாகப்பட்டினத்தில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

நாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் த.வெ.க தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

இலங்கை கடற்படையினரால் கடலில் 35 தமிழக மீனவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் முதன்மைக் கோரிக்கையாக முன் வைக்கப்பட்டதுடன் தமிழக கடற்றொழிலாளர்களின் மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது, பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்டெடுப்பது மற்றும் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைப்பாதுகாப்பது தொடர்பில் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## போதைவஸ்து வியாபாரம் கம்பஹாவில் தம்பதி கைது

கம்பஹாவில் திவுலபிட்டிய பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த தம்பதி ஒன்று திவுல பிட்டிய பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திவுலபிட்டிய பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திவுலபிட்டிய - மரதகஹமுல பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனவும் சந்தேக நபர்களான தம்பதி நீண்ட காலமாக திவுலபிட்டிய கட்டுவெல்லேகம, துனகஹ, அளுதேபொல, மரதகஹமுல, நெல்லிகஹமுல, நில்பனாகொட, மினுவாங்கொடை ஆகிய பிரதேசங்களில் போதைப் பொருள்விற்பனை செய்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தம்பதியிடமிருந்து 11 கிராம் 980 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 5 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் விசாரணையின் பின் அவர்களை மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7)

## லொறி மோதியதில் சிறுவன் உயிரிழப்பு

காலி - கொழும்பு பிரதான வீதியில் வெட்டுமகடை சந்திக்கருகில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த சிறுவன் ஒருவன் லொறி மோதியதில் உயிரிழந்துள்ளான்.

காலிப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவனை மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த அச்சிறுவன் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் 11 வயதுடைய கட்டுக்குறுந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் களுத்துறை நாகொடை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கு காரணமான லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்குப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

‘எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்.’



லியூசி லார்கோம் (அமெரிக்க கவிஞர்)

## ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

களனி - வனவாசல பகுதியில் உள்ள ரயில் கடவையில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பேலியகொடை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மாலம்பே - கடுவலை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

### ஆளும் கட்சியின் பிரதேச சபையில்

## வரவு - செலவுத் திட்டம் 3 வாக்குகளால் தோல்வி

(சொரணதொட்டை)

தேசிய மக்கள் சக்தி கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சொரணதொட்டைப் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் 03 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 08 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்ததாகவும் எதிர்க்கட்சியின் 02 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வரவில்லை என்றும் கூறப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் 04 உறுப்பினர்களும் தலைவரும் ஆதரவாக வாக்களித்துள்ளபோதும் பெரும்பான்மை அடிப்படையில் மூன்று வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் தோல்வி அடைந்துள்ளது.

குறித்த சபையில் எதிர்க்கட்சிக்கு 10 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் 05 உறுப்பினர்களும் இருந்த போதிலும் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் போது எதிர்க்கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்ததால் தலைமை தேசிய மக்கள் சக்தி கட்சி வசமாகியது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஹெரோயினுடன் மூவர் இராணுவத்தால் கைது

காலி - சீனிகமப் பகுதியில் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் மூன்று பேர் ஹெரோயின் போதைவஸ்துடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களது உடைமையில் இருந்து மூன்று கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விற்பனை மற்றும் சட்டவிரோத சொத்து சேகரிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன், தற்போது போதைப் பொருளைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி தலைமையில் எடுத்துள்ள நடவடிக்கைக்கு மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இருந்தபோதும் யாழ்ப்பாணத்திலே இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகளிலே போதைப்பொருள் மாபியாக்கள் அடாவடி செய்துள்ளனர். இது போன்ற குற்றச் செயல்களில் ஈடு படுவர்கள் போதைப்பொருளை விற்று அதில் வருகின்ற பணத்தை வட்டிக்கு கொடுத்து வட்டிப் பணத்தைப் பெறுவ தற்காக பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும். இது தொடர்பான நடவடிக்கை என்ன என்று கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார். இந்த நிலையிலே இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 260 | 300 | 250 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 250 | 200 |
| தக்காளி | 180 | 200 | 200 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 280 | 150 | 200 |
| கோவா | 180 | 200 | 200 | 250 | 160 |
| கரட் | 200 | 250 | 250 | 300 | 250 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 300 | 350 | 155 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 150 | 200 | 155 |
| பாகற்காய் | 600 | 800 | 500 | 1000 | 500 |
| வெண்டக்காய் | 160 | 250 | 200 | 200 | 140 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 250 | 300 | -- |
| பயற்றங்காய் | 250 | 200 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 260 | 250 | 250 | 300 | 200 |
| பீற்றூட் | 150 | 220 | 200 | 200 | 160 |
| கறிமிளகாய் | 600 | 800 | 500 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 250 | 500 | 350 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 400 | 380 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 280 | - |
| கீரை - 1 பிடி | 140 | 40-120 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1600 | 1400 | 1600 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 500 | 800 | 600 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 240 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | -- |

# சுகாதார சீர்கேடுகளுடன் உணவகம்; உரிமையாளருக்கு தண்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி இயங்கிய ஒரு உணவகம் திடீர் சோதனையின் போது கண்டறியப்பட்டதையடுத்து அதிகாரிகளால் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டதுடன், உரிமையாளருக்கு 50,000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத் திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட விசுவமடு பகுதியில் கடந்த புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது, உடையார் கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் இணைந்து குறித்த உணவகத்தினை பரி சோதித்தனர்.

சோதனையின் போது மருத்துவ சான்றிதழ் இல்லாமை, உணவக அனுமதிப் பத்திரம் இன்மை, தொழிலாளர்கள் முகச் சவரம் செய்யாமை, தண்ணீர் பகுப்பாய்வு சான்றிதல் இன்மை, கழிவு தொட்டி இல்லாமை, அனுமதி பெறாதமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் காணப்பட்டன. மேலும், வெற்றிலை மென்றவாறு உணவு கையாண்டல்போன்ற கடுமையான சுகாதார மீறல்களும் பதிவாகியிருந்தன.

இந்நிலையில், குறித்த விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் மற்றும் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றம் உரிமையாளர்களை குற்றவாளிகளாக இனங்கண்டு, உணவகத்தை சுகாதார சீர்கேடுகள் இன்றி நிவர்த்தி செய்யும் வரை மூடுமாறு உத்தரவிட்டதுடன், உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் எதிர்காலத்தில் இது போன்ற மீறல்கள் இடம்பெறாதவாறு கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது. (3-299)

# இராசிபலன்

09.11.2025
ஐப்பசி 23, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.36 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 2.44 மணிவரை
சுப நேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சந்திராஷ்டமம்: அனுசம்

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உடல் நலனில் கவனம் தேவை.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்ப் பயணமொன்றால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




அடுத்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொன்னான நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

விவாதம் அருமையானது; வாக்குவாதம் வெறுமையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கில்...

டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வூட்லர் தெரிவித்துள்ளார்.

குறித்த துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த பூகுடு கண்ணா என்பவரின் சகாவே கொல்லப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சூட்டுச் சம்பவம் அப்பகுதியில் பொருத்தியிருந்த கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகி இருந்தன.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய காரைப் போன்ற ஒரு காரில் யாழ்ப்பாணத்தில் பயணித்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், பெண்ணொருவர் மற்றும் தென்னிலங்கை வாசி உள்ளிட்ட மூவரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தாம் கொழும்பில் காரை வாடகைக்கு பெற்று யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்ததாகவும், தமக்கும் கொலைக்கும் தொடர்பு இல்லை எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, கொழும்பில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள விசேட குழு, கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கி விரைந்துள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கொழும்பில் இடம் பெறும் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், யாழ்ப்பாணம் ஊடாக இந்தியாவிற்கு தப்பிச் செல்வது அதிகரித்துள்ள நிலையில், யாழ்ப்பாண கரையோர பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்களை பாதுகாப்புத் தரப்பினர் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-7,33,104)

## மனம்பேரியின்...

சோதனை செய்யப்பட்டபோதே, குறிப்பிட்ட வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மித்தெனிய, தலாவ பகுதியில் ஐஸ் ரக போதைப்பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்களை மறைத்து வைத்திருந்தமை தொடர்பான சம்பவத்தில் சம்பத் மனம்பேரி அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பல்வேறு அரசியல்வாதிகளுடன் அவருக்குத் தொடர்பிருப்பதாக சந்தேகம் எழுந்திருந்தது.

இந்நிலையில் அவரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்காக, கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மாகாண சபைத்...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், பாதீடு தொடர்பான 2ஆம் கட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குச் சட்டச்சிக்கல்தான் தடையெனில், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி நினைத்தால் அச்சிக்கலை சீர்செய்ய முடியாதா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

மேலும் தேர்தலை நடத்த நிதி ஒதுக்கியிருந்தாலும் அதனை நடத்துவதற்குக் காட்டும் ஆர்வம் குறைவாகவே உள்ளது.

மாகாண சபைத் தேர்தல் "வரும் ஆனால் வராது" என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி தனது உரையை நிகழ்த்தியிருந்தார்.

நாட்டில் உள்ள தமிழர்களைத் தோல்வியடைந்தவர்களாகக் காட்டவே மாறிமாறி வரும் அரசாங்கங்கள் செயற்படுகின்றன.

இது நாட்டுக்கும் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல.

நாட்டில் நீண்டகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கோ அல்லது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஓர் தளத்தை இடுவதற்கோ ஜனாதிபதியிடம் எந்த விதமான கருத்துகளும் இல்லை.

நாட்டில் தற்போது ஆட்சி செய்யும் தலைவர்களுக்கு அதுகுறித்ததான தொலைநோக்குப்பார்வை இல்லை என்பதை பாதீடு சுட்டிக்காட்டுகிறது என்றார். (ந-7)

## அனர்த்த...

திணைக்களம் ஆகியவை இணைந்து விசேட கூட்டு வேலைத்திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்தியுள்ளன.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு எதிர்பாராத காலநிலையால் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஏதேனும் அனர்த்த நிலைமை காரணமாக பரீட்சைக்குத் தோற்றுவதில் பாதிப்பு ஏற்படும் மாணவர்கள் 117 என்ற இலக்கத்திற்கோ அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் 1911 என்ற இலக்கத்திற்கோ தகவல் தெரிவிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயற்பாட்டு மையத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய பரீட்சை அவசர நடவடிக்கைப் பிரிவின் விசேட அழைப்பு இலக்கங்களான 0113 668 026, 0113 668 032, 0113 668 087 மற்றும் 0113 668 119 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொண்டும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# ஓட்டோ விபத்து; ஐவர் காயம்

(நுவரெலியா)

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் நானு ஓயா ஹூலங்வங்குவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில், சிறுவர்கள் உட்பட 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலவாக்கலையில் இருந்து நுவரெலியா உடபுஸ்ஸல்லாவ நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியொன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியில் இருந்து விலகி கவிழ்ந்தமையால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2025.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 6007
Q 0 0 0 2 7 8
அத சம்பத
Q 0 2 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 0582
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 0123
மேடம் 49 56 59

தன நிதானய
திகதி - 2025.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 2037
X 04 08 09 32 X

மெகா பவர்
திகதி 08/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2355
G 18 14 46 61 79

ஜய
திகதி 2025.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 0275
T 1 8 9 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4249
சீட்டிழுப்பு திகதி 08.11.2025
A 19 20 62 78
A

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 1316
மீனம் 05 18 21 52 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.11.2025 வெற்றி வாரம் 0715
ஆங்கில எழுத்து A மற்றும் வெற்றி இலக்கம் 2 6 8 6 0 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,169,822.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2981
சீட்டிழுப்பு திகதி 2025.11.08 தினம் சனிக்கிழமை
37 59 70 80 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,403,300.80

சனிதா
திகதி 08.11.2025 வெற்றி வாரம் 5142
25 52 61 72 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,711,016.80

சசிரி
வெற்றி வாரம் 811
சீட்டிழுப்பு திகதி 08.11.2025 சனிக்கிழமை
04 12 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4693
சீட்டிழுப்பு திகதி 08.11.2025 தினம் சனிக்கிழமை
20 27 35 39 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,110,659.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 30 06 47 65 71
2157 08.11.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.605,698,109.40

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2807
சீட்டிழுப்பு திகதி: 2025.11.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,364,286.40
10 21 48 68 F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ஆம் நாள் கிரியையான "அஸ்தி விசர்ஜன பூசை" அறிவித்தல்



மண்ணில் 16.02.1952 | விண்ணில் 25.10.2025

அமரர்

## வதனராணி பிறேமச்சந்திரன்

அவர்கள் கடந்த 25/10/2025 சனிக்கிழமை அன்று சிவபதத்தை தழுவிக்கொண்டார்.

அன்னாரின் துயரச் செய்தி அறிந்து ஆறுதல் கூறியும், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் எம்மை ஆசுவாசப்படுத்திய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் 16ஆம் நாள் கிரியையான "அஸ்தி விசர்ஜன பூசை" இன்று ஞாயிற்றுக்கிழமை 09.11.2025 அன்று அவரின் இல்லத்தில் (நுணுவிலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்,) காலை 04.00 am மணியளவில் நடைபெற்று, ஊறணி புனித தீர்த்தக் கடலில் அஸ்தியானது கலக்கப்படும் என்பதனை அறியத்தருவதுடன் அதனைத் தொடர்ந்து நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம். (C-4290)

நன்றி

தொடர்புகளுக்கு:- +44 7587 178397, 0094705721911

தகவல்:- குடும்பத்தினர்


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 196/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 237/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 210/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 730/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌபி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1696)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


## பணியாளர் வெற்றிடம்

வடமராட்சி 750, தனியார் பஸ் சேவைச் சங்கத்தின் பின்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

பதவி : எழுது வினைஞர்

கல்வித்தகைமை : க.பொ.த (சா/த) கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி, கணனி அறிவு இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 20.11.2025

ஆர்வமுள்ளவர்கள் சங்கப் பணிமனைக்கு நேரில் வரவும்

செயலாளர் 077 258 1519 (C-4292)


## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970 (5645)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127



SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

IFSLS

# வடமாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு!!

## அரசாங்க வட்டியற்ற மாணவர் கடன் திட்டம் யாழ்ப்பாணத்தில் SLIIT NORTHERNUNI இல் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது

க.பொ.த உயர்தர (அனைத்து பிரிவுகள்) கல்வியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து அரச பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கும் முகமாக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தபட்டதே வட்டியற்ற மாணவர் கடன் திட்டமாகும்.

வட்டியற்ற மாணவர் கடன் திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக வடமாகாணத்தில் SLIIT NORTHERN UNI மட்டுமே உள்ளது.

### அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகள்

- 2022, 2023 மற்றும் 2024 ஆண்டு க.பொ.த உயர்தரத்தர பரீட்சையில் தோற்றியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- மூன்று முறைகளுக்கு மேற்படாத க.பொ.த உயர்தரத்தில் (அனைத்து பிரிவுகள்) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தி (S).
- பொது அறிவில் குறைந்த பட்சம் 30 புள்ளிகள்.

### SLIIT NORTHERN UNI யில் வழங்கப்படுகின்ற முழுநேர வாரநாள் பட்டப்படிப்புகள்

**BSc (Hons) in Information Technology, Specialising in**
- Artificial Intelligence
- Software Engineering
- Data Science
- Information Technology
- Cyber Security

**BBA (Hons), Specialising in**
- Accounting & Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

### கடன் தொகை

- தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிகளுக்கு ரூபா.1,000,000.00 வட்டியற்ற கடன்.
- வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகளுக்கு ரூபா.900,000.00 வட்டியற்ற கடன்.
- பட்டகற்கையினை 4 வருடங்களில் பூர்த்தி செய்த பின்னர் 1 வருடம் சலுகைக் காலமாக வழங்கப்படும்.
- அதனை அடுத்து வரும் 8 வருடங்களில் கடன் மீள் செலுத்தப்படுதல் அவசியம்.
- கல்வியை தொடரும் காலத்தினுள் கடனை மீள செலுத்த தேவையில்லை.
- மேலதிக கொடுப்பனவாக வருடத்திற்கு ரூபா.75 000 பெற்று கொள்ளவும் முடியும்

விண்ணப்பங்கள் ஆரம்பமாகும் திகதி **01.11.2025**

விண்ணப்பங்கள் முடிவு திகதி **30.11.2025**

**விண்ணப்பிக்கும் முறை**
- SLIIT NORTHERN UNI இன் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு: *northernuni.lk/application-form*
- கடன் திட்டத்திற்கு: *www.studentloans.mohe.gov.lk*

021 7534 807
northernuni.lk | admissions@northernUni.com

SLIIT NORTHERN UNI, 239 அரசடி வீதி, கந்தர்மடம் சந்தி , யாழ்ப்பாணம்

Interest Free Student Loan Scheme
MINISTRY OF EDUCATION, HIGHER EDUCATION AND VOCATIONAL EDUCATION
HIGHER EDUCATION DIVISION
980/4A, Wickramasinghe Place, Ethul Kotte

Director: 011 2879 724
Student Loans Division: 011 2879 727
Email: dsls@mohe.gov.lk
Website: www.mohe.gov.lk

(C-4291)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org